www.padippakam.com

# ஈழ தேசம்

மலர் 1 | பெப்ரவரி 1996 | இதழ் 6

# கொழும்பில் குண்டு வெடித்து 140 பேர் பலி 1400 பேர் காயம்

இலங்கை அரசுக்கு பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தவென மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் அரசுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. புலிகள் மிகவும் திறமையாகச் செயல்பட்டு இந்த அழிவினை ஏற்படுத்தியுள்ளனர். பொருளாதார அழிவில் உயிரழிவையும் சமன்படுத்தி சாதனை படைத்துள்ளனர் என்று பலரும் பேசிக் கொள்கின்றனர். ஆனால் இந்த அழிவில் யாருக்கு லாபம் என்று எவரும் சிந்திக்கவில் லை. இரு பகுதியினருக்கும் நட்டம் தான் மிஞ்சியது. இலங்கை அரசுக்கு உயிரிழப்பும், பொருளாதார இழப்பும் ஏற்பட்டுள்ளது உண்மைதான். மறுபக்கத் தில் பார்த்தால் புலிகளுக்கு பயங்கரவாதிகள் என்ற பெயர் மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஈழத் தமிழ் மக்கள் அப்பாவிகள் என்ற பெயர் ஏற்பட்டு வந்தது. வன்னிப் பகுதிகளில் அகதிகளாக இருப்பவர்கள், அனுதாபத்திற்கு உரியவர்கள் என்று உலகம் நம்ப ஆரம்பித்தது. பிரபாகரனும் அந்த அனுதாபத்தைப் பயன்படுத்தி தொடர்ந்து உதவிகளும், ஊக்கங்களும் அளிக்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தார். அனுதாபம் கிடைக்க வேண்டுமாயின் எங்கள் பக்கம் நியாயங்கள் இருக்க வேண்டும். அதற்குத் தகுதியானவர்களா இவர்கள்? என்று உலக நாடுகள் கூர்ந்து கவனிக்கும். படுகொலைகளை மேற்கொள்ளத் தங்களையே அர்ப்பணிக்கும் தியாகச் சுடர்கள் என்று உலக நாடுகள் எதுவும் கருத மாட்டாது. படுபயங்கரவாதிகள் இவர்கள், இவர்களால் உலகிற்கு ஆபத்து ஏற்படும், எனவே இவர்களை சர்வதேச சமூகம் நிராகரிக்க வேண்டும் என்றுதான் எண்ணத் தோன்றும். அப்படித் தான் எண்ணியுமுள்ளனர். பொருளாதார இழப்பை ஏற்படுத்த வேண்டும் என்றால் உயிர்ச் சேதத்தை தவிர்க்க வேண்டும். அப்படி இல்லாதவிடத்து இது பயங்கரவாதச் செயல்தான்,



சந்திரிகாவின் படைகள் யாழ் நகரைக் கைப்பற்றிய வேளை சிங்கள மக்கள் பட்டாசு வெடித்து மகிழ்ந்தவர்கள். அமைதியை விரும்புபவர்கள் என்றால் அப்படிச் செய்திருக்க மாட்டார்கள். துப்பாக்கியால் பிரச்சனையைத் தீர்த்து விடலாம் என்று சந்திரிகா சிங்களவர்களுக்கு ஆசை காட்டி வருவது அழிவுக்குத்தான் இட்டுச் செல்லும் என்பதைச் சிங்கள மக்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

இந்தக் குண்டு வெடிப்பால் தமிழ் மக்களுக்கு உலகளவில் ஆதரவும், அனுதாபமும் பெருகிவிட்டது என்று தமிழ் மக்கள் நினைத்தால் மேற்கொண்டு இன்னும் பல அழிவுகளுக்கே வழி வகுக்கும். அமெரிக்காவில் இருக்கும் அதியுயர்ந்த கட்டடத்தின் (World Trade Center) மீது இஸ்லாமியத் தீவிரவாதிகள் குண்டு வைத்ததன் மூலம் 300க்கும் அதிகமானவர்கள் கடந்த ஆண்டு இறந்தனர். இதற்கு பிரபாகரன் அனுதாபமும் கண்டனமும் தெரிவித்து அறிக்கை விட்டதை நாம் ஞாபகப்படுத்த வேண்டும். வரலாறுகளையும் நாம் மேற்கொண்டுள்ள பணிகளையும் மறப்பதினால் பாரிய தாக்கங்கள் தமிழ் மக்களை வந்தடைகின்றன.



## கொழும்பில் தொடரும் கொள்ளைகள்

கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சிங்களவர்கள் இராணுவத்தினர் போன்று சீருடையணிந்து இரவு வேளைகளில் தமிழர்கள் வாழும் வீடுகளில் சோதனை செய்வதாகக் கூறிக் கொண்டு வீட்டில் உள்ள நகைகள், பணம், மற்றும் விலை உயர்ந்த பொருட்களைச் சூறையாடிச் செல்கின்றனர். இது போன்ற சம்பவங்கள் இப்பகுதிகளில் கடந்த சில வருடங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தக் கொள்ளைச் சம்பவங்களுக்கு இராணுவத்தினரும் உடந்தையாக இருந்து வருகின்றனர்.

## தீவிரமடையும் பயிற்சி

கடந்த ஆண்டு இறுதியில் இலங்கை அரசு பதின் மூவாயிரம் சிங்களவர்களை புதிதாக இராணுவத்தில் சேர்த்துள்ளது. இவர்களுக்குத் தீவிரமாக விசேட பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் சில வாரங்களில் பயிற்சிகள் முடிவு பெற்றுவிடும். இவர்களில் 700 பெண்களும் அடங்குவர். பின்னர் இவர்களும் தங்களது சாகசங்களைப் புரிய வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்படுவார்கள்.



## ஈழ மக்களின் இதயக் குரல்

படிப்பகம்

www.padippakam.com



# அகதிகள் பக்கம்



## முதலைக் கண்ணீர்

இலங்கை இராணுவம் யாழ்ப்பாணம் மீது நடாத்திய தாக்குதலால் கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் கிளிநொச்சியிலும், வன்னிப்பிரதேசத்திலும் அடைக்கலம் புகுந்துள்ளனர். யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற மறுத்தவர்களையும் புலிகள் பலாத்காரமாக வெளியேற்றினர். சிங்கள அரசினதும் புலிகளினதும் அரசியல் சதுரங்க ஆட்டத்தில் அப்பாவி மக்கள் பலியாகி வருகின்றனர். கிளிநொச்சியிலும், வன்னியிலும் அகதிகளாக்கப்பட்டுள்ள மக்களுக்கு தமிழகத்தில் உள்ள சில தலைவர்கள் போட்டி போட்டுக் கொண்டு நிதியளிப்பதும் அத்தியாவசிய மருந்துகள் சேகரித்து வழங்குவதும் வரவேற்கக்கூடியதே. ஆனால் இவைகள் அனைத்தும் உண்மையாகவே பாதிக்கப்பட்ட மக்களுக்காகவா அல்லது புலிகளுக்காகவா என்று சந்தேகப்படுவதில் நியாயம் உள்ளது. அகதிகள் என்ற போர்வையில் புலிகள் இந்தியாவிற்குள் ஊடுருவி விடக்கூடாது என்பதற்காக கடல் எல்லைகளை இந்திய அரசு கடுமையாகக் கண்காணித்து வருவது தவறு என்று குற்றம் சாட்டுபவர்கள் தான் 1990 ஆம் ஆண்டு கப்பலில் வந்த ஈழத் தமிழ் அகதிகளைத் தமிழகத்துக்குள் நுழைய அனுமதி மறுத்தனர். மீறி வந்தவர்களை சிறப்பு முகாம்களில் அடைத்தனர். தமிழகத்துக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்ட ஈழத் தமிழ் அகதிகளை ஒரிசா மாநிலம் வரவேற்றதுடன் இவர்கள் அகதிகள் அல்ல எமது விருந்தினர் என்று அறிவித்து ஈழத் தமிழர்களை வரவேற்றார் அப்போதைய முதலமைச்சர் பிஜுபட் நாயக்.

இலங்கையின் யுத்த சூழ்நிலை காரணமாக கல்வி மறுக்கப்பட்ட ஈழத் தமிழ் அகதிக் குழந்தைகளுக்காக தமிழகத்தில் பாடசாலை தொடங்க ENDLF அனுமதி கோரிய போது மறுக்கப்பட்டது. அண்டை மாநிலமான கர்னாடகா கை கொடுத்ததினால் கடந்த ஐந்து வருட காலமாக பெங்களூரில் ஈழத் தமிழ்க் குழந்தைகளுக்கென இந்திரா காந்தி இன்டர்நெஷனல் அக்கடமி எனும் பாடசாலை இயங்கி வருகிறது. புலிகளின் ஆதரவாளர்களாக செயல்ப்படும் இவர்கள் ஈழத் தமிழர்களுக்காக நன்மை செய்யும் வேறு அமைப்புக்களின் நன் முயற்சிகளைத் தடை செய்யாமல் இருந்திருக்கலாம். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு எனும் அண்ணாவின் பொன்மொழிகள் வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான்.

ஈழத்தில் அகதிகளாக்கப்பட்டுள்ள தமிழர்களுக்காக இன்று குரல் கொடுக்கும் இவர்கள், இந்தியாவை நம்பி தமிழகத்திற்கு வந்துள்ள அகதிகளின் குறைகளையும் கொஞ்சம் கவனித்திருக்கலாமே. அகதி முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் உரிய கால்த்தில் கிடைப்பதில்லை. மேலும் கொடுக்கப்படும் கொடுப்பனவுகள் போதுமானதாக இல்லாததால் முகாமிற்கு வெளியே சென்று வேலை செய்வதற்கு சில அதிகாரிகள் கெடுபிடி செய்வதை இவர்கள் அறிந்ததில்லையா? ஈழத் தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கான கதவுகள் தமிழகத்தில் மூடப்பட்டுள்ளது இவர்களுக்கு தெரியாதா? இந்த குறைகளை நிவர்த்தி செய்ய ஏன் இவர்கள் முயலவில்லை? இங்கே அகதிகளாயிருப்பவர்கள் தமிழர்கள் இல்லையா, அல்லது ஈழத்தவர்கள் இல்லையா? தமிழகத்தில் ஈழத் தமிழ் அகதிகள் இருப்பதையே தெரியாதது போல் இருக்கும் இவர்கள் இலங்கையில் உள்ள அகதிகள் மேல் அக்கறை காட்டும்போது சந்தேகம் எழத்தான் செய்யும்.

பா. இராஜரத்தினம்

## ஈழத் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி

ஈழத் தமிழ் மாணவர்களுக்கு தமிழகத்தில் உயர் கல்வி மறுக்கப்பட்டுள்ள அநீதியை மத்திய அரசு கவனத்திற்குக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஈழத் தமிழ் மாணவர்கள் தமிழகத்தில் மீண்டும் உயர் கல்வி பயில அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழக அரசு தொடர்ந்து மௌனம் சாதித்து வருகிறது. ஈழத் தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வி தொடர்ந்து தமிழகத்தில் மறுக்கப்படும் பட்சத்தில் மாற்று நடவடிக்கையாக வேறு மாநிலங்களில் அனுமதி பெற்றுத் தருவதற்கு மத்திய அரசு



முயற்சி எடுக்க ஒப்புக் கொண்டுள்ளது. மேலும் ஈழத் தமிழ்க் குழந்தைகள் ஆரம்பக் கல்வியை அரசு பாடசாலைகளில் இலவசமாகப் பெறுவதற்கு ஏற்கனவே விதிகள் உள்ளது. கடந்த காலங்களில் அரசு பாடசாலைகளில் ஆரம்பக் கல்விக்காக ஈழத் தமிழ் அகதிக் குழந்தைகள் பணம் செலுத்தி இருந்ததால் அதனை மீளப் பெற மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள இசைவு தெரிவித்துள்ளது.

இதன் தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவைப்படின் எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## அகதிகள் அலைச்சல்

விடுதலைப் புலிகளின் கட்டளைப் படி தமது வீடு வாசலை விட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்காட்டிற்கு தஞ்சம் தேடிச் சென்றனர் மக்கள். அங்கே அவர்களுக்கு குறைந்தபட்ச உணவு, தங்கிட வசதி எதுவும் கொடுக்கப்படவில்லை. தொல்லை பொறுக்காத அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர். கிட்டத்தட்ட பத்தாயிரம் தமிழ் மக்கள் இவ்விடம் சிங்கள ராணுவம் நிலை கொண்டுள்ள பகுதிக்குத் திரும்பியுள்ளதாக செய்திகள் வருகின்றன.

## 666

1995ம் ஆண்டில் சந்திரிகா அரசுக்கு எதிராக 666 மனித அடிப்படை உரிமைகள் மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சட்ட விரோதமாகக் கைது செய்தல், அறிவிப்பின்றி தடுத்து வைத்தல், மோசமான சித்திரவதை என்ற கொடுமைகளுக்கு ஆளானவர்களே இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளனர். இவ்வ தைரியத்துடன் வெளியே வந்த விஷயங்கள், வராதவை எத்தனையோ?

## இரண்டு பக்கங்கள்

இராணுவ நடவடிக்கைகளினால் மரணமடைந்த அல்லது பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு புனர் நிர்மாணப் பிரிவினால் வழங்கப்பட்டு வந்த நிவாரணப் பணம் இனிமேல் வழங்கப்பட மாட்டாது என அரசு அறிவித்துள்ளது.

அதேவேளையில் தமிழர் பிரதேசங்களில் யுத்தம் செய்கிற இராணுவத்தினருக்கு, அவர்கள் காயப்பட்டால் அல்லது மரணமடைந்தால் நிறைய உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்திலுள்ளவரின் குடும்ப உடன் வாரிசுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இந்த அட்டை இருந்தால் அரசாங்கத் திணைக்களம் எதிலும் காண்பித்து முன்னுரிமை உதவியும், சலுகையும் பெற்றுக் கொள்ளலாம்.

## பயங்கரவாத இயக்கம்

கனடாவில் உள்ள உயர் ஆராய்ச்சி நிலையம் ஒன்று, கனடிய அரசாங்கத்திற்கும், அதன் நிறுவனங்களுக்கும் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கம் உலகிலேயே மிகப் பெரிய பயங்கரவாத இயக்கம் என்றும், இதற்குப் புலிகளின் கொடூரச் செயல்களும், படுகொலைகளும், கட்டுப்பாடில்லாத செயல்களுமே காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கூத்தர் சிரிக்கிறர்

### ஒன்னுமே புரியல



யாழ்ப்பாணத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்தினமாம் ஆட்சியும் செய்தினமாம் ஆனால் உங்கு உத்தியோகம் பார்க்கிற - வையளுக்கு சிங்கள அரசுதான் சம்பளம் கொடுக்க வேண்டுமாம். அதிலேயும் இவங்க கொஞ்சம் அள்ளிக்குவாங்க. மக்களுக்கும் வேங்களுக்கும் தேவையான உணவு சாமான்களும், மருந்துகளும் சிங்கள அரசு கொடுக்கினம். இவைகள் வந்து சேர சுணங்கினாலும் கண்டனம் வேறு எழுப்பினம். எல்லாத்தையும் சிங்கள அரசே அனுப்ப, அதை நம்பியே யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தவையள் இப்போது அதை பறி கொடுத்துப் போட்டு நிக்கினம். அது சரி, கட்டுப்பாட்டில் எதை வைத்திருந்தவையள், ஒருவேளை துப்பாக்கிக்கு மக்கள் கட்டுப்பட்டிருந்ததைதான் இப்படி சொல்லினமோ? யாழ்ப்பாணத்தை விட்டு சிங்கள இராணுவம் வெளியேறினால் பேசத் தயார் என்று சொல்லினம். அப்படின்னா சிங்கள இராணுவத்தை துரத்தி அடிக்க உவையளால் முடியாதோ. தனித்து நின்று எப்படி ஈழம் அமைக்கப் போகினம். ஒன்னுமே புரியல பேர்ங்கோ!

ஈழத் தலைமைகளின் ஆரம்பகாலத் தவறுகளே இன்றைய இழப்புக்களும் அழிவுகளுமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# கொழும்புக் கட்சிகள் ஒன்று கூடின

கொழும்பில் சந்திரிகாவின் துணையில் இருக்கும் ஐந்து தமிழ்க் குழுக்கள் கூட்டணி அமைத்துள்ளன. தனித்தனியாக நின்று சந்திரிகாவுக்கு ஆள்ப்பிடித்ததை விட கூட்டாகச் செய்தால் ஓர் வலு ஏற்படும் என்று கருதி கூட்டணி உருவாக்கியுள்ளனர். இதில் முக்கிய பங்கு வகிப்பவர் ஈரோஸ் அமைப்பின் சங்கர். இந்தியாவுக்கு வந்து இலங்கை பற்றிய தகவல்களும், இலங்கைக்குச் சென்று இந்தியா பற்றிய தகவல்களும் கொடுப்பதில் இன்று முன்னணியில் விளங்குபவர் இவர். பாலகுமார் புலிகளுடன் சங்கமித்த பின்னர் ஈரோசைச் சேர்ந்த அனைவருமே விலகிச் சென்று விட்டனர். ஆனால் சங்கர் மட்டும் சென்னையில் அவரது வீட்டில் ஆறு பொமேரியன் நாய்களைத் துணிந்து வளர்த்தார். சென்னையில் நாய்களின் துணையுடனும், கொழும்பில் சந்திரிகாவின் துணையுடனும் தனித்து அரசியல் நடத்துகிறார். இலங்கை அரசிடம் பெரும் பணத்தைப் பெற்றுள்ள இவர் பெருமுயற்சி செய்து நான்கு இயக்கங்களை ஒன்று கூட்டினார். EPRLF, TELO, EROS, PLOT ஆகிய நான்கும் இணைந்தன. டக்ளஸ் தேவானந்தேவின் E.P.D.P. யை நிராகரித்தனர். ஏனெனில் சந்திரிகா E.P.D.P. க்கு மட்டும் கப்பல் விட்டு நெடுந்தீவுக் கருவாடுகளை எல்லாம் கொழும்புக்குக் கொண்டு வந்து அனியாய விலைக்கு விற்று டக்ளஸ் நிறையக் காசு சேர்த்து விட்டார் என்ற கோபம் மற்றைய நான்கு இயக்கத்தினரையும் வாட்டி வந்தது. இறுதியில் ஆஸ்திரேலியாவிலிருந்து ரவீந்திரன் என்பவர் கொழும்புக்கு வந்து மீண்டும் பெருமுயற்சி செய்து டக்ளஸ் தேவானந்தேவையும் கூட்டணியில் சேர்த்து விட்டார்.

இத்துடன் நிற்காமல் T.U.L.F ஐயும் சந்தித்து அந்தக் கூட்டணியில் இணையும் படியும், இது பற்றிப் பேச சென்னையில் தங்கியிருக்கும் T.U.L.F. தலைவர் சிவ சிதம்பரம் அவர்களைக் கொழும்புக்கு அழைத்து வரும்படியும் ரவீந்திரன் கேட்டிருந்தார். அந்த அளவுக்கு இவர் ஓர் கென்றி கிசிங்கராகச் செயல்ப்பட்டார். இந்த ரவீந்திரன் ஓர் முன்னாள் கொழும்பு வாசி. ஜெயவர்த்தனாவால் கொழும்பு வாழ்க்கை பாதிப்படைய லண்டன் வழியாக ஆஸ்திரேலியா சென்று கொழும்பு வாழ்க்கையை அங்கே தொடர்ந்தவர். சந்திரிகா தாராளமாக E.P.D.P. யின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதைக் கேள்விப்பட்டு ஒரு மாத லீவில் மீண்டும் கொழும்பு வந்துள்ளார்.

1977ல் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (TRRO) என்ற அமைப்பு ஒன்றினை K.C. நித்தியானந்தா ஆரம்பித்தார். நித்தியானந்தா சிங்களவர் மத்தியில் தொழிற் சங்கம் நடத்தியவர். 77 வரை வடக்குக் கிழக்கில் தமிழினம் ஒன்று இருப்பதையே அறியாதவர் நித்தியானந்தா. நித்தியானந்தன் என்ற பெயரை நித்தியானந்தா! என்று சிங்களவருக்கு ஏற்றவாறு மாற்றிக் கொண்டவர் இவர். கென்ற் பாம், டொலர் பாம் ஆகியவற்றில் 300 அகதிகளைக் குடியேற்றிவிட்டு பாதியில் கைவிட்டவர் நித்தியானந்தா (ஆனால் காந்தியம் அந்தக் குடியிருப்புக்களை தொடர்ந்து பராமரித்தது) ரவீந்திரனும் பொழுது போக்கிற்காக TRRO வில் (அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்) பணியாற்றியவர்.

நித்தியானந்தாவின் வளர்ப்பு வாரிசு தேவானந்தே செல்வச் செழிப்புடன் கொழும்பில் தமிழருக்குத் துரோகம் செய்வதைக் கேள்விப்பட்டு வாரிசுடன் கூட்டு வியாபாரத்திற்காக கொழும்பு வந்துள்ளார் ரவீந்திரன்.

ஒற்றுமை பற்றிப் பேசி வெற்றி கண்டால் சிலவேளை தமிழர் தலைவராகலாம் என்றும் ரவீந்திரன் எதிர்பார்க்கிறார். ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்கள் நிறையத் தமிழ்த் தலைவர்களை உருவாக்கி மக்களுக்கு சேவை செய்து வருவதையும் ரவீந்திரன் கேள்விப்பட்டு, அப்படி ஓர் வாய்ப்புக் கிடைத்தால் தன்னால் திறமையாக தலைமை தாங்க முடியும் என்று அடித்துக் கூறியுள்ளார். டக்ளஸ் மூலம் சந்திரிகாவையும் யு.என்.பி தலைவர்களையும் சந்தித்து ஆசி பெற்றுள்ளார். இந்தவேளை பார்த்து கொழும்பில் குண்டு வெடித்து அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. சங்கரும், ரவீந்திரனும் எடுத்த முயற்சிகள் தனித்தனியானதாக இருந்தாலும் நோக்கங்கள் ஒன்றுதான்.

இவர்களது கூட்டு, தமிழ் மக்களின் பிரச்சனைக்கு மேலும் தடங்கலை ஏற்படுத்துமே அல்லாது நன்மை விளைவிக்கும் கூட்டத்தார் இல்லை இவர்கள். எங்கள் பிரச்சனையில் லாபங் கண்ட இவர்களிடத்தில் எதனை எதிர்பார்க்க முடியும், துரோகம், வஞ்சகம், பணத்தாசை, தலைமை ஆசை என்று அவற்றினில் போட்டி போடும் இந்த இயக்கங்களது எத்தகைய வளர்ச்சியும் தமிழ் மக்களுக்கு ஆபத்தானது.



# தமிழகத்தில் சரியான தலைவர்கள் இல்லை!

**-தொண்டமான்**

அண்மையில் தமிழகம் வந்திருந்த இலங்கை அமைச்சர் தொண்டமான் 17-01-96 அன்று பத்திரிகைகுக்கு அளித்த பேட்டியில் ராஜிவ் காந்தி கொலையில் நீதிமன்றத் தீர்ப்பு வரவில்லை. ஆயினும் புலிகள் மீது சந்தேகப்படுவதால் இலங்கையின் இனப் பிரச்னையில் இந்தியா ஒதுங்கி இருப்பதைப் பாராட்ட முடியாது என்று கூறி இருந்தார். மேலும் தமிழ் நாட்டில் சரியான தலைவர்கள் இல்லை என்றும், எம்.ஜி.ஆர் போன்ற தலைவர்கள் அப்போது இருந்ததனால் தான் இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி ஆகிய தலைவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்னையில் தலையிட்டனர் என்றும் கூறி இருக்கிறார்.

சந்திரிகா அரசுடன் புலிகள் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்த வேளையில் சந்திரிகாவின் கைகள் கறை படியாதவை அதனால்தான் பேசுகிறோம். இல்லையேல் ராஜிவ் காந்தி, பிரேமதாசா போன்றவர்களுக்கு ஏற்பட்ட கதிதான் சந்திரிகாவுக்கும் ஏற்படும் என்று ஒரு பேட்டியின்போது புலிகளின் பேச்சாளர் அன்டன் பாலசிங்கம் ராஜிவ் காந்தியின் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்று ஒப்புக் கொண்ட பிறகும், தொண்டமானுக்கு இன்றும் சந்தேகம் தீரவில்லை. இவர் இப்போது சார்ந்திருக்கும் சந்திரிகா அரசு கூட ராஜிவ் காந்தியின் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்று குற்றம் சுமத்தியிருப்பது இவருக்குத் தெரியாதோ. தொண்டமானின் கூற்றின்படி நீதிமன்றம் சொன்னால்தான் நம்புவார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின்போது சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்த தொண்டமான் ஏர் லங்கா நிருவனத்தில் கோடி ரூபாய் ஊழல் செய்துள்ளது யாவரும் அறிந்ததே. இதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவே சந்திரிகாவுடன் இணைந்து கொண்டார். இவர் செய்த மோசடியை நீதிமன்றம் சொன்னால்த்தான் ஒப்புக் கொள்வார். ஆகையால் நீதிமன்றத்தைத் தவிர்க்க அரசுடன் இணைந்துவிட்டார்.

இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பதவிக்காக அதனுடன் ஒட்டிக் கொள்ளும் தொண்டமான், புலிகளை இப்போது தமிழகம் ஆதரிக்காததால் தமிழகத்தில் சரியான தலைவர்கள் இல்லை என்று ஆதங்கம் தெரிவித்திருப்பது வேடிக்கையாக உள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சி ஆரம்பிக்கப்பட்டபோது, செல்வநாயகம், பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் முத்தலைவர்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்டனர். ஜெயவர்தனே அமைச்சர் பதவி தருவதாக ஆசை காட்டியதும், கட்சியை விட்டோடி ஜெயவர்த்தனேயுடன் சேர்ந்து கொண்ட தொண்டமான்தான் இன்று தமிழகத்தில் சரியான தலைவர்கள் இல்லை என்று கூறுகிறார்.

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆரம்பம் முதல் தமிழகம் அளித்த பங்களிப்பு அளப்பரியது. ஆதரவு நாடி வந்த ஈழத் தமிழ் மக்களுக்கும், பிரபாகரன் உட்பட சகல போராளிகளுக்கும் அடைக்கலாம் கொடுத்து பசியுடன் வந்தவர்களுக்கு உணவும், காயத்துடன் வந்தவர்களுக்கு மருத்துவ உதவிகளும் வழங்கி விடுதலைக்கான நன் முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கியது மட்டுமல்ல, ஈழப் போராட்டத்திற்கு ஆதரவாக தீக்குளித்த தியாகிகளும் தமிழகத்தில் இருந்தனர். ஈழப் போராட்டத்திற்கு அன்று தமிழகம் கொடுத்த ஆதரவு இன்று இல்லாமல் போனதற்கு சரியான தலைவர்கள் இல்லாதது அல்ல காரணம். இராமநாதபுரத்தில் காவல்ப் படையினர் சுட்டுக் கொல்லப்பட்டமை, சுங்க இலாகா அதிகாரிகள் கடத்தப்பட்டமை, பத்மநாபா உட்பட 13 பேர் கொலை செய்யப்பட்டமை, இந்திய மக்களால் மன்னிக்க முடியாததான ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டமை போன்று புலிகளால் தமிழக மண்ணில் செய்யப்பட்ட அட்டூழியங்கள் தான் காரணம் என்பது சிங்கள அரசுக்குத் துதிபாடிக் கொண்டிருந்த தொண்டமானுக்கு தெரிய நியாயமில்லைதான்.

டட்லி சேனநாயக்கா, பண்டாரநாயக்கா ஜெயவர்த்தனே ஆகியோர் போட்ட ஒப்பந்தங்களைச் சிங்கள அரசுகள் அமல்படுத்தாததினால்தான் பிரபாகரன் பேச்சுவார்த்தையை ஒதுக்கிவிட்டு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டார் என்று கண்டுபிடித்துள்ளார் தொண்டமான். ஜெயவர்த்தனேயும், இந்தியாவும் செய்து கொண்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமல் செய்யப்படாமல் இருந்த பிரேமதாசாவுக்கு துணை போனது புலிகள்தான் என்பது தொண்டமானுக்குத் தெரியாதது அல்ல. புலிகள் மட்டுமல்ல ஒரு அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பு வாய்ந்தது எனும் வகையில் அப்போதும் அமைச்சரவையில் இருந்த தொண்டமானும்தான் பொறுப்பு ஏற்க வேண்டும்.

இந்தியாவுக்கு எதிராகச் செயல்ப்பட்டு வரும் புலிகளை ஆதரிக்கும் தொண்டமான் இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவைத் தலையிடக் கேட்பது இவருக்கு எந்தக் கொள்கையும் இல்லாத தன்மையையே காட்டுகிறது. புலிகளுக்கு எதிராகக் கடுமையான போரில் ஈடுபட்டு வரும் சிங்கள ஆட்சியில் புலிகளின் ஆதரவாளரான தொண்டமான் எப்படி இடம் பெறமுடிகிறது. தொண்டமானுக்கு விவஸ்தை இல்லையா? அல்லது சிங்கள ஆட்சியருக்கு விவஸ்தை இல்லையா? எந்த ஆட்சி வந்தாலும் தொண்டமான் மந்திரி. அப்படியாயின் இவரது கொள்கை என்ன? பதவியும் பணமும்தானா?

புலிகளைத் தேடும் சாக்கில் மலையகத்தில் தமிழ் மக்கள் சிங்களப் படையினரால் மிகவும் துன்புறுத்தப்படுகின்றனர். மேலும் மலையக மக்களின் பிரதான பிரச்சனையான, நாடற்றவர் பிரச்னை இன்னும் தீர்க்கப்படாத நிலையில் அம்மக்களின் தலைவராக விளங்கும் தொண்டமான் இவர்களின் பிரச்சனையின் தீர்வுக்காகப் போராடாமல் பதவிக்காக, ஆட்சிக்கு வரும் எல்லாத் தரப்பினருடனும் ஒட்டிக் கொண்டிருக்கும் இவர் தமிழகத்தில் சரியான தலைவர்கள் இல்லை என்று சொல்லுவதற்கு என்ன அருகதை உள்ளது. இப்போது இலங்கைப் பிரச்னையில் தலையிட இந்தியாவை தொண்டமான் கோருவது யாரைக் காப்பாற்ற? தமிழ் மக்களையா? புலிகளையா? அல்லது தொண்டமானையா?

மக்கள் சிந்தனையுடன் உறுதியான இலட்சியங்கள் கொண்ட தெளிவான கொள்கையே நாளைய வெற்றிக்கு எம்மை அழைத்துச் செல்லும்.

படிப்பகம்

www.padippakam.com



# உன் அடிச் சுவட்டில் நானும்



பாவம் ட்ராய்! வீட்டிற்குத் தாமதமாக வரும்போதெல்லாம் என்னுடைய பெற்றோர் வீட்டுக்குப் போய் என்னுடைய கடைசித் தங்கையை தூக்கிக்கொண்டு வருவார். அப்பொழுதுதான் நான் ஏதும் தவறாக எண்ணிக்கொள்ள மாட்டேனாம். இத்தகைய நிகழ்ச்சிக் கோவைகள் என் கண் முன்னால் நிறைந்து நின்றன. அதனால் என் இதயத்தில் எண்ணற்ற கூரிய ஊசிகள் பாய்வதைப்போல உணர்ந்தேன். திருமணத்திற்கு முன்பும், பின்பும் ட்ராய் எவ்வாறு தனது சக்தியையும், மனத்தையும் இவ்வளவு பெரிய கஷ்டம் நிறைந்த வேலையில் ஒருமித்து ஈடுபடுத்திக்கொண்டே, என் மனத்தை மகிழ்ச்சிப்படுத்தவும் அவர் எடுத்துக் கொண்ட அக்கறையையும் எண்ணி எண்ணி வியந்து கொண்டிருந்தேன்.

என் கண்ணில் கோர்த்து நின்ற கண்ணிரைக் கண்டவுடன் சகோதரி 'எக்ஸ்' கூறினார்: "கட்டுப்படுத்திதக்கொள்குய்யென்! நீ அழ ஆரம்பித்துவிட்டால் அவர்கள் சந்தேகப்பட்டு உள்ளே அனுப்பி விடுவார்கள்."

'மற்றவர்கள் கணவன் மூலமோ, மனைவி மூலமோ தங்களது புரட்சி நடவடிக்கைக்கு உதவி பெற்றார்கள். ஆனால் நானோ, குறைந்த பட்ச உதவிகூடச் செய்யவில்லை என்பது மட்டுமல்ல, பல சமயங்களில் அவருடைய வழியில் இடைஞ்சலாக இருந்திருக்கிறேனே! நான் அவருடைய நம்பிக்கையைப் பெறவில்லையே என்பதை நினைத்து வருந்துகிறேன்."

"புரட்சிகர வேலையில். ஒவ்வொருவரும் தமது கடமையைச் செய்ய வேண்டும்", என்றார் சகோதரி 'எக்ஸ்'. புரட்சிகர வேலையைப் பற்றி வேறு யாரிடம் அவர் பேசக் கூடாது. அந்த வேலைக்கு அந்த நபர் தேவைப்பட்டால் தான் பேசலாம். இது மிகக் கண்டிப்பான விதி, இதற்கு ஒவ்வொருவரும் பணிந்தாக வேண்டும். உன்னை நம்பவில்லையென்றால், உன்னை எப்படி ட்ராய் நேசித்திருக்க முடியும்? சரி, "நீங்கள் இருவரும் ஏதாவது விஷயங்களைப் பற்றி விவாதித்துக் கொள்வீர்களா?"

"அவர் அடிக்கடி என்னிடம் தவறு கண்டு பிடிப்பார்"

"எதற்காக?"

இக் கேள்விக்குச் சிறிது நேரம் யோசித்தேன். பிறகு, "எங்கள் பக்கத்து வீட்டார்களிடம் யோசனையில்லாமல் நடந்துகொண்டு விட்டால் கடுமையாக விமர்சிப்பார். அவருக்கு அழுத்தமான வண்ணங்கள் பிடிக்காது. அதற்கு அவர் சொல்வார், "நாமெல்லாம் உழைக்கும் மக்கள், பகட்டுத்தனமான ஆடைகளை அணிந்து காப்பியடிக்கக் கூடாது," என்று. என்னுடைய ஆடைகளும் கடல் நீல மாகவோ அல்லது வெள்ளை நிறமாகவோதான் இருக்குகம், அந்த நிறங்களையே அவர் நேசிப்பார். "சைகோன் நகரம் ஹனாய் நகரைப்போல ஆகிய பிறகு ந்ாம் எவ்வளவு விரும்புகிறோமோ அவ்வளவு சினிமா பார்க்லாம்" என்று கூறி சினிமாவுக்குப் போவதற்கு மறுத்து விடுவார். கடந்த இரு வருடங்களாக ஒருவரையொருவர் நன்கு அறிந்திருக்கிறோம், சினிமாவிற்கென்று ஒரே ஒரு முறைதான் போயிருக்கிறோம்."

"அப்படியானால் இப்பொழுது உனக்குத் தெரிந்திருக்கும் அமெரிக்க வெறியர்களை எவ்வளவு தூரம் ட்ராய் வெறுத்துத் தள்ளினார் என்பது. இதைப்பற்றி எதுவும் உன்னிடம் பேசியிருக்கிறாரா?" என்று கேட்டார், சகோதரி 'எக்ஸ்'.

ஓ! நிச்சயமாக, அடிக்கடி பேசியிருக்கிறார். 1954 ம் ஆண்டில் முதன் முதலில் 'அமெரிக்க தியெம்' கும்பல் "கம்யூனிஸ்ட் மறுப்பு "இயக்கத்தைத் தொடங்கியதை என்னுடைய சொந்தப் பகுதியில்தான் நான் பார்த்தேன். சோ டுயாக், வின்ட்ரின்ஹ் போன்ற இடங்களில் நிறைய பேர்களை அவர்களது கைகளில் வயர்களைக் கோர்த்து யாரும் அறியாத இடங்களுக்குக்கொண்டு செல்வதையும் பார்த்திருக்கிறேன். அவர்களில் யாரும் திரும்பியதே கிடையாது, என்று அவர் என்னிடம் சொல்லியிருக்கிறார். அவருடைய சகோதரி ஒருமுறை அவரிடம் " நீ இன்னும் சிறுவனாகவே இருப்பதால் நல்லதாய்ப் போயிற்று. இல்லையானால் அவர்களைப் போலவேதான் உன் விதியும் அமைந்திருக்கும்" என்று கூறியிருக்கிறார். நாங்கள் இருவரும் காதலிக்கத் தொடங்கிய பிறகு ஹியூ நகரத்திற்கும் போனார். அவர் அங்கே போயிருந்துபோதுதான் முதன் முதலாக புத்த மதத்தினர் அடக்குமுறைக்குள்ளாயினர். அங்கிருந்து சைகோனுக்குத் திரும்பிய பிறகும் கோபத்தினாலும், ஆத்திரத்தினாலும் குமுறிக் கொண்டுருந்தார். அவருடைய கிராமப் பகுதிகளில் 'டாங்கு'களின் இரும்புச் சக்கரங்களில் நசுங்கி எத்தனையோ பேர் சாவதையும். வெடிகுண்டுகளினால் பலருடைய உடல் சின்னா பின்னமாகச் சிதறி ஓடுவதையும் என் கண்ணாரக் கண்டேன் என்று என்னிடம் கூறியிருக்கிறார்.

பிரெஞ்சுக்காரர்களைவிட அமெரிக்க வெறியர்கள் பல நூறு மடங்கு கொடியவர்கள் என்று கூறுயிருக்கிறார். இவற்றையெல்லாம் பின் காலத்தில் நினைவுக்குக் கொண்டு வரும்போது, "மக்களின் ஆர்ப்பாட்டங்களை எழுச்சிகளை அடக்க ராணுவங்கள் உபயோகிக்கப்படுகின்றன! உலகத்திலேயே தென் வியத்நாமில்தான் இத்தகைய காட்டுமிராண்டித்தனம் நடக்க முடியும் என்று கருதுகிறேன்" என்று கூறுவதுண்டு. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை அவர் வெறுத்தார் என்பதை நீண்ட நாட்களாகவே அறிவேன். அவர்களை அமெரிக்கர்கள் என்று கூட அழைக்க மாட்டார். வெளியே எங்காவது நாங்கள் இவ்விதம் நடந்து போகும் போது யாராவது அமெரிக்கன் வந்தால், அவர் என் கையைப் பிடித்து நிறுத்திவிட்டு. "முதலில் அந்த அசிங்கமான மிருகங்கள் போகட்டும்" என்று கூறுவார். அப்படித்தான் அவர் அமெரிக்கர்களை அழைப்பார். ஆனால் அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பற்றி மிகச் சமீபத்தில்தான் தெரிந்து கொண்டேன். அவர் என்னிடம் சொன்ன கதைகளும், அவர் நடந்து கொண்டவிதமும், அவர் ஏதோவொரு அமெரிக்க எதிர்ப்பு ஸ்தாபனத்தில் சேர்ந்திருப்பார் என்ற சந்தேகத்தை உண்டு பண்ணியது. திருமணம் முடிந்து சில நாட்களில் ஒரு நாள், மிகப் பெருமையோடு வீட்டிற்குள் நுழைந்தார். "ஒரு மிக விசேஷமான செய்தி! நீ கேள்விப்பட்டாயா?" என்றார். எனக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை, வியப்பில் மூழ்கியிருந்தேன். அவரே தொடர்ந்தார். "15,000 டன் எடையுள்ள விமானம் தாங்கிக் கப்பலை பல விமானங்களோடு சேர்ந்து நம்மவர்கள் கடலுக்குள் மூழ்கடித்து விட்டர்கள்! ஆகா அருமையான வெற்றி! அதைப்போல நானும் ஒரு வெற்றியை ஈட்டமுடியுமானால்...ஆகா!" சில நாட்கள் கழித்து ஒரு தினம் பகல் உணவுக்கு வரவில்லை. அன்று மே மாதம் 6-ம் தேதி என்று நினைக்கிறேன்.

அமெரிக்க வெறியன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்ட டாக்ஸி டிரைவர் ஒருவரை அடக்கம் செய்வதற்காக மற்ற தொழிலாளர்களோடு இவரும் போய்விட்டார். அந்தச் சவ அடக்க நிகழ்ச்சி வெளிப்படையான அமெரிக்க எதிர்ப்பு இயக்கமாகவே இருந்தது. "அமெரிக்க ஆக்கிரமிப்ராளர்கள் ஒழிக! கொலைகாரர்கள் ஒழிக" என்று கோஷமிட்டோம்" என்று மயானத்திலிருந்து திரும்பி வந்தபின்பு கூறி



படிப்பகம்

www.padippakam.com



னார். மே மாதம் 15 முதல் 22வரை அமெரிக்க எதிர்ப்பு வாரம் கொண்டாடுவதாக இருந்தது. அதில் டாக்ஸி டிரைவர்கள் அமெரிக்கர்களை தங்கள் டாக்ஸிகளில் ஏற்றிக் கொள்வதில்லை என்றும், இதைப் போலவே பல தொழில்களில் ஈடுபட்டவர்கள் அமெரிக்கர்களை பகிஷ்கரிப்பது என்று முடிவு செய்தார்கள். இதில் 'பூட்பாலிஷ்' போடும் சிறுவர்களும், பத்திரிகை விற்கும் சிறுவர்களும்கூட பங்கு பெறுவதாக இருந்தது.

இந்த வாரத்திற்காக ட்ராய் மிக ஆவலோடு காத்திருந்தார். ஆனால் மே மாதம் 9ம்தேதி கைது செய்யப்பட்டு விட்டார்.

இந்தச் சமயம் சகோதரி 'எக்ஸ்' தலையைக் குலுக்கிக் கொண்டார். பிறகு என்னிடம், "குய்யென், நீ உண்மையிலேயே ஒரு அப்பாவிப் பெண்; உன்னை ட்ராய் மிகவும் நம்பியிருக்கிறார்; புரட்சிகரமான வேலைக்கு உனக்கு வழியும் காட்டியிருக்கிறார் என்பதை நீதான் அறிந்துகொள்ளாதிருந்திருக்கிறாய். சைகோன் போன்ற எதிரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நகரத்தில் மக்களின் அன்பும், தக்க பாதுகாப்பும் இல்லையென்றால், மிக எளிதில் ரகசிய உளவாளிகளின் கையில் பிடிபட்டு விடுவார்கள். ட்ராய் உன்னைக் ச ந்துகொண்டதெல்லாம், உன் னச் சரியான முறையில் நல்லது கெட்டது என்று பிரித்துணரும் பக்குவம் பெற்ற பெண்ணாக மாற்றவேண்டும் என்பதற்குத்தான் என்பது புரிகிறதல்லவா? அவர் உன்னிடம் சொல்லிய விஷயங்களிலெல்லாம் என்ன பொருள் பொதிந்திருந்தன தெரியுமா? தென்வியத்நாமில் நடக்கும் துயரமிக்க கொடுமைகளுக்கெல்லாம் யார் காரணம் என்று கூறி அவர்கள்மீது உன்னை வெறுப்புக்கொள்ளச் செய்து கொஞ்சம் கொஞ்சமாக புரட்சியில் உன்னையும் பங்கு கொள்ளச் செய்யவேண்டும் என்பதற்காகத் தான; உன்னிடமிருந்து இவ்வளவு செய்திகளைக் கேட்ட பிறகு உன் கணவர்மீது கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் அதிகரித்திருக்கிறது. இருபது வயதே நிரம்பிய இளம் வாலிபனாக, சைகோனைப் போன்ற நகரில் வாழ்ந்தும் சகல ஆசைகளையும் அடக்கிக் கொண்டிருக்கிறார். இரண்டு வருடத்தில் ஒருமுறைதான் சினிமாவுக்குப் போயிருக்கிறார். அதுவும்கூட தன்னுடைய அன்புக்குரிய வளைத் திருப்திபடுத்துவதற்குத்தான் என்று தெரிகிறது" என்று சொல்லிக்கொண்டே தன் விரலால் என் இதயத்தின் மீது சுட்டிக் காட்டினார். ஒரு வினாடி என்ன செய்வது என்று புரியாது திகைத்துப் போய்விட்டேன்.

"நாங்கள் பார்த்த சினிமா புத்தருடைய வாழ்க்கையைப் பற்றியது; அந்த சினிமாவில் ஒரு காட்சி எனக்குப் புரியவில்லை. வீட்டிற்கு வந்தவுடன் அது என்ன என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் சினிமாவையே முழுமையாக மறந்து போய்விட்டேன்" என்றார்.

இதைக் கேட்டு எங்களோடு இருந்த மற்ற கைதிகள் பலமாகச் சிரித்து விட்டார்கள், சிலர் சிரிப்பை அடக்கிக் கொள்ள வாயைக் கைகளால் மூடிக்கொண்டார்கள். 'எக்ஸ்' என்னிடம் "அவர் எப்பொழுதாவது அவருடைய வாழ்க்கையைப் பற்றிக் கூறியிருகிறாரா?" என்று கேட்டார்.

காம்பவுண்டு சுவருக்குள்ளே சூரிய வெளிச்சம் விழும் ஒரு இடத்தை நோக்கி நாங்கள் இடம் மாறி அமர்ந்தோம். என்னுடைய கூட்டாளிகள் மிகக் கவனமாகக் கேட்பதை அறிந்து கொண்டு, என் கதையை மேலும் தொடர்ந்தேன்:

"அவருடைய சொந்தக் கிராமத்திற்கு நான் என்றும் போனதில்லை. இருவரும் ஒரு சமயம் போய்வரலாம் என்று உறுதி கூறியிருந்தார். திருமணம் முடிந்த பிறகு சில நாட்கள் விடுமுறை வாங்கிக் கொண்டு, அங்கு என்னை அழைத்துக் கொண்டு, செல்வதாகக் கூறியிருந்தார். அவருடைய குயாங்நாம் பகுதி மிகவும் வறுமை நிறைந்தது; சில சின்னஞ்சிறு நெல் வயல்கள் தான் உண்டாம். ஆகையால் அப்பகுதி மக்கள் வேலைக்காக இங்கும் அங்குமாக அலைந்துகொண்டிருப்பார்கள். அங்கு தாராளமாகக் கிடைப்பது தண்ணீர்தான்; இந்த சைகோனில் ஒரு குவளை தண்ணீருக்குக் கூடப்பொதுத் தண்ணீர் தொட்டிக்கு ஓடவேண்டியதைப் போல அங்கில்லை. தூபான் நதி எவ்வளவு அழகாக இருக்கும் என்று அடிக்கடி கூறுவார். அந்த நதி அவருடைய வீட்டிலிருந்து நூறு மீட்டர் தூரம்தான் இருக்கும். கலங்கலின்றித் தெளிவாக பளிங்குபோல நீரோடிக் கொண்டிருக்கும். நதியின் இரு கரைகளும் மணல் மேடுகளாக, நாணற்புற்களின் நிழல் மூடிக்கிடக்கும். சைகோனில் கடற்கரை ஓரங்களில் ஜனங்கள் பொழுதைக் கழிக்க வரும்போதெல்லாம் அவர் என்னைச் சமாதானப்படுத்தும் முறையில், "நாம் நம்முடைய கிராமத்திறிகுச் செல்லும் போது தூபான் நதி ஓரமாக நீண்டு கிடக்கும் மணற்பரப்பைப் பார்த்தால் இந்தக் கடற்கரை எம்மாத்திரம். இது மாதிரி சூரிய ஒளியல் குளிப்பதற்கு ஏராளமான சந்தர்ப்பம்கிடைக்கும்" என்று சொல்வார். அவருடைய குழந்தைப் பருவம் மிகவும் சோகம் நிறைந்தது. பச்சிளம் குழந்தையாக இருந்த போதே அவருடைய தாய் இறந்துபோய் விட்டார். பிரெஞ்சுக்காரர்கள் அவருடைய பகுதிகளில் புரட்சிக்காரர்களை வேட்டையாடத் தொடங்கியபோது மூன்றே வயது நிறைந்திருந்தது. அப்பொழுது இவருடைய தாயார் இவரைத் தூக்கிக்கொண்டு காடுகளுக்குள் ஓடி ஒளிந்து கொண்டார். ஆனால் சில மாதங்களில் பனி, வெய்யில், மழை இவற்றால் தாக்குண்டும், பட்டினியினாலும் இறந்து போய் விட்டார். அவருடைய தகப்பனார் பிரெஞ்சுக்காரர்களால் பிடித்துச் செல்லப்பட்டார். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு வேலை செய்து பிழைப்பதற்காக வெகு தொலைவிற்குச் சென்று விட்டார். பல வருடங்களுக்கு ஒருமறைதான் வீட்டிற்கு வருவார். ட்ராய் அவருடைய சித்தப்பா, மூத்த அண்ணன், அண்ணி இவர்களால்தான் வளர்க்கப்பட்டார்.

எங்கள் திருமணத்திற்கு முன்பு ஒருமுறை நாங்கள் சண்டை போட்டுக்கொண்டோம். அவரை கவலையடையும்படி செய்து விட்டேன், "நான் மிகச் சிறுவனாக இருக்கும் போதே தாயை இழந்துவிட்டேன். தகப்பனாரையும் பல வருடங்களுக்கு ஒருமுறைதான் பார்ப்பேன், அதுவும்கூட சில நாட்களுக்குத்தான் இருப்பார். குடும்ப வாழ்க்கைக்காக ஏங்கியிருக்கிறேன். இப்பொழுது எனக்கென்று ஒரு அன்புக் காதலி உண்டு, அவளும் என்னுடன் கோபித்துக் கொண்டு என்னைக் கவலைப்படச் செய்கிறாள். உன்னுடைய குடும்பம் வடக்கே இருந்து இங்கு வந்திருக்கிறது. நானும் பிழைப்பை நாடி என் கிராமத்தை விட்டு இங்கே வந்திருக்கிறேன். இருவருக்கும் ஒரேவிதமான பிரச்னைகள் இருக்கின்றன. இப்பொழுது இருவரும் சந்தித்திருக்கிறோம்; இருவரும் காதலிக்கவும், ஒருவருக்கொருவர் பிரியமும், இரக்கமும் காட்டவேண்டும்" என்று கூறுவார்.

ட்ராய்க்குப் பதினைந்து வயதாகும்போது, டாநாங்கிற்கு அவருடைய மூத்த அண்ணனுடைய வீட்டிற்கு வந்து தங்கினார். அங்காவது ஏதாவது தன்னளவிற்குச் சம்பாதிக்லாம் என்றுதான் சென்றார். அங்கும் தான் தன்னுடைய அண்ணனுக்கும், அண்ணிக்கும் அவர்களுடைய ஏழ்மை நிலைமையிலும் சுமையாக இருக்கக்கூடாது என்று சைகோனுக்குப் புறப்பட முடிவு செய்தார். அங்கிகருந்து ஒரு கப்பலில் சைகோனுக்குப் புறப்படத் தயாராகி விட்டார். தன்னுடைய அண்ணனுக்கும் அவருடைய குடும்பத்தாருக்கும். ஒரு கடிதம் எழுதி ஒரு நண்பனின் மூலம் கொடுத்தனுப்பினார். ஆனால் அந்தக் கடித்தைக் கப்பல் புறப்படுவதற்கு முன்னாதகவே ட்ராயுடைய அண்ணனிடம் கொடுத்துவிட்டான் அந்த நண்பன். ஆக, ட்ராய் கப்பலின் மேல். தளத்தில் நின்று கொண்டிருக்கும்போது, அவருடைய அண்ணன் சைக்கிளில் மிக அங்கு வருவதைப் பார்த்தார். உடனே கீழே இறங்கி மறைவான இடத்தில் ஒளித்து கொண்டார். அங்கு முழுவதும் சுற்றியலைந்த அண்ணன் கடைசியில் உரத்த குரலில், "ட்ராய் வீட்டிற்கு வந்து விடு! எப்படியாவது நாம் சமாளித்துக் கொள்வோம். நானும் உன்னுடைய அண்ணியும் உன்னை நன்றாகக் கவனித்துக் கொள்வோம். வெகு தொலைவுக்குப் போய் விடாதே தம்பி, நீ கண்காணாத் தொலைவுக்குப் போய் இறந்து விடாதே!" என்று உருக்கமாகக் கூவினார். மறைந்திருந்த ட்ராயின் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. குமுறி அழுத அழுகை கொஞ்ச நஞ்சமல்ல. அண்ணனை ட்ராய் மிகவும் ஆழமாக நேசித்தார். ஆனால், மனைவியோடும் பல குழந்தைகளோடும் வாழும் அவருக்கு என்றும் சுமையாக இருக்க விரும்புவில்லை. இன்னும் அண்ணனுடைய குரல் அங்கு எதிரொலி செய்து கொண்டிருந்தது. "ட்ராய், எங்ஃளோடு வீட்டிற்கு. வந்துவிடப்பா! இருப்பதை எல்லோரும் பகிர்ந்து சாப்பிடுவோம் தம்பி!"

தொடரும்..



அமெரிக்க விமானப் படையின் குண்டு வீச்சால் நாசமாகிப் போன வியட்னாம் கிராமத்தின் வரை படம்.

## நாளை வரும் ஈழமம்மா..

அம்மா அம்மா
ஈழ தேசம் நீயே அம்மா
பசுமை நிறைந்த பூமி நீதானம்மா
பட்டினியில் நீ இன்று
கிடக்கும் நிலை ஏனம்மா

உன் தேசத்தில் எரியுதம்மா நெருப்பு
தினமும் வீதியெங்கும் பெருகுதம்மா
பிணங்களின் குவிப்பு....

எம் தாயும் நீதானம்மா
எம் தேசமும் நீதானம்மா
அக்கரையும் இல்லாமல்
இக்கரையும் இல்லாமல்
தத்தளிக்கும் படகு போல்
இன்று நம் இனமம்மா....

வெற்றி பெற்றிடுவோம் நாளை
விண் வரை எம் புகழ் பாடி நாமே
மீண்டும் பசுமைகள் தழைத்து நீ வருவாய்
தரணியில் நீதான் சுதந்திர ஈழமம்மா...


*— நிக்ஷன் -3ம் வகுப்பு*

*இந்திரா காந்தி சர்வ்தேச கல்வி நிலையம்*

**விடுதலை இயக்கம் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்றால் மக்களை நேசிக்க வேண்டுமே தவிர மக்களைச் சிறைப்படுத்தலாகாது.**

www.padippakam.com






இந்திரா காந்தி சர்வதேச கல்வி நிலைய மாணவர் களின் ஒரு பகுதியினர்.

# குழந்தைகள் திருவிழாவில் கலந்து கொண்ட ஈழத் தமிழ் மாணவர்கள்

பெங்களூர் சென் ஜோசப் கல்லூரியின் மாணவ மாணவிகளால் உருவாக்கப்பட்ட தேசிய சமூக சேவைகள் இயக்கம் (N.S.S.) சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட ஒதுக்கப்பட்ட மற்றும் அகதிகளாக்கப்பட்ட மாணவர்களின் திறமைகளை வெளிக் கொண்டு வரும் நோக்குடன் பலவிதமான கலை நிகழ்ச்சிகளை 1996-01-14ம் திகதி நடத்தியது. இந்த நிகழ்ச்சிக்கு ''குழந்தைகள் திருவிழா'' எனப் பெயரிடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் ஈழத் தமிழ் மாணவர்களுக்காக பெங்களூரில் நடத்தப்படும் இந்திரா காந்தி சர்வதேசக் கல்வி நிலையத்தில் (I.G.I.A.) இருந்தும் குறைந்தது நூறு பேர் கண்டிப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று தேசிய சமூக சேவைகள் இயக்கம் கேட்டுக் கொண்டதிற்கிணங்க நூறுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். விழாவில் பலவிதமான போட்டி நிகழ்ச்சிகள் இடம் பெற்றது. இப்போட்டிகளில் இந்திரா காந்தி சர்வதேசக் கல்வி நிலையத்தைச் (I.G.I.A.) சேர்ந்த மாணவர்களும் கலந்து கொண்டு அவர்களது புத்திசாலித்தனமான திறமைகளினால் பல பரிசுகளைப் பெற்றதுடன், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளனர். இவர்களின் எதிர்காலத்தில் இன்னும் பல வெற்றிகளைப் பெற அனைத்து வழிகளிலும் ''ஈழதேசம்'' ஒரு வழிகாட்டியாக இருக்கும்.

ஈழத்து மாணவர்கள் நெடுங்காலமாகவே இலங்கையின் கல்வி வரலாற்றில் பெருஞ்சாதனை புரிந்தவர்கள். மருத்துவம், பொறியியல், அறிவியல் துறைகளில் முதல் மாணவர்களாக கடந்த காலங்களில் திகழ்ந்தார்கள். ஆனால் இன்றைய நிலைமை என்ன? பள்ளிக்கூடங்களும், பல்கலைக்கழகமும் சிதைந்துபோய், மாணவர்கள் கல்வி என்பது முற்றிலும் கைவிடப்பட்ட விஷயமாக ஆகிவிட்டது. நாளாந்தச் சோற்றுக்கே வழியின்றி அகதிகளாய் விரட்டப்பட்டு இளைய தலைமுறை விரக்தியுடன் வாழ்கிறது. அது மட்டுமல்ல பத்து வயதுக் குழந்தைகளை யுத்த முனைக்கு நிர்ப்பந்தமாக அனுப்பப்பட்டு இருக்கின்றனர். அடுத்துவரும் தலைமுறை இளைஞர்கள் கல்வியறிவின்றி, மன விசாலமின்றி வாழப் போகிறார்கள். இதுதான் விடுதலைப் புலிகள் இன்று ஏற்படுத்தியுள்ள நிலை. .

அறிவு வளர்ச்சியோ, மனப்பலமோ அற்ற ஒரு தலைமுறை உருவாவதை நாம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமா? வெளிநாடுகளில் ஈழத்துப் பிள்ளைகள் அந்நிய மொழியைக் கற்று, தாய் மொழியை மறந்து வருகின்ற அவலம். இந்தியாவிலோ ஈழ அகதி மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி உரிமை முற்றாகவே மறுக்கப்பட்டுள்ளது. பத்து ஆண்டுக்கு மேலாக இங்கு படித்து வரும் மாணவர்களின் நிலைமை இதுதான். ஈழ நாட்டிலோ அடிப்படைக் கல்வியின்மை, நாசமாகும் தலைமுறை.

எங்கள் ஈழப் போராட்டம் தோன்றுவதற்கு கல்விதான் அடிப்படைக் காரணமாக அமைந்தது என்பதனைப் பலரும் மறந்துவிட்டனர். இன்று எங்கள் குழந்தைகள் படும் துயரங்கள் அரசியலைப் பிழைப்பாகவும் வியாபாரமாகவும் கொண்டு நடத்துபவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஓர் இனத்தின் கல்வியே அற்றுப் போகும் அளவுக்கு விடுதலைப் போராட்டத்தில் வந்துள்ள தொய்வு என்ன என்று எம்மவர்களில் எத்தனை பேர் சிந்தித்துள்ளனர்? வெளிநாடுகளில் இருப்பவர்களும், படித்துப் பட்டங்கள் பெற்றவர்களும் சில இயக்கங்களின் பிரதிநிதிகள் என்று பெருமை பேசிக் கொள்பவர்களும் என்ன செய்கின்றனர் என்று தெரியுமா? கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் தங்கள் துரோகங்களை நியாயப்படுத்த இவர்கள் பிரசாரங்கள் செய்கின்றனர். புலிகளை ஆதரிப்பவர்கள் புலிகள் துப்பாக்கியுடன் இருக்கும் குழந்தைகளது படங்களை வெளியிட அவற்றுக்கு வீர வரலாறு என்று மகிழ்ச்சி பொங்க வியட்னாம் மற்றும் ஆபிரிக்க நாடுகளின் குழந்தைகளும் போரிட்டுள்ளனர் என்று எங்கள் இனத்தின் குழந்தைகள்து கல்வி அழிப்புக்கு நியாயம் கற்பிக்கின்றனர்.

கல்வி குழந்தைகளது அடிப்படை உரிமை. தலைமைப் பதவி, அரசியல் இலாபம், வீர சாகசம், துரோகத்தனம் இவை போன்ற எவற்றுக்கும் அவற்றினைப் பயன்படுத்தக்கூடாது. விடுதலைப் புலிகள் உட்பட கொழும்புக் கட்சிகள் அனைத்துமே எங்கள் சமுதாயத்திற்குத் துரோகம் செய்பவர்களே! காரணங்கள் எதுவாக இருந்தாலும் குழந்தைகளது கல்வியில் பாதிப்பு ஏற்படாது பாதுகாக்கப்பட வேண்டியது எங்கள் இனத்தின் கடமை. இதனை எத்தனை பேர் உணர்ந்துள்ளனர். இந்தப் போக்கை மாற்றியமைக்க நாம் பாடுபட வேண்டும்.

— ஆசிரியர் —

## புலிகளுடன் தொடர்பு

விமானம் மூலம் புருலியாவில் ஆயுதங்கள் வீசியது தொடர்பாக C.B.I யினரால் கைது செய்யப்பட்டவர்களில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஜோஹன்ஸ் பிரான்ஸ் என்பவர் தனக்கு புலிகளுடன் தொடர்பு இருப்பதாகவும், திருகோணமலையில் புலிகளின் முகாமில் தங்கி இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். இவர் புலிகளின் முகாமில் தங்கி இருந்த காலத்தில், பெண் புலியுடன் தகாத உறவு கொண்டிருந்ததாக மேலும் தெரிவித்துள்ளார். இந்த ஆயுத வியாபாரியைத் திருப்திப்படுத்துவதன் மூலம் ஆயுத வியாபாரத்தை அபிவிருத்தி செய்து கொள்ளும் முயற்சிக்காகவே பெண் புலியை இந்த தகாத உறவில் ஈடுபடும்படி வற்புறுத்தப்பட்டுள்ளார். போர்க் கருவிக்காக மானத்தை விற்கும் அளவிற்கு விடுதலைப் போர் இன்று முன்னேற்றம் கண்டுள்ளது.



உணவு வேளையின்போது பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ள் மாணவர்களின் ஒரு பகுதியினர்.



படிப்பகம்

www.padippakam.com



# ஈழத்தை மீட்க சிறுவர்படை!

தமிழீழத்து அடிமை விலங்கினை ஒடிக்க சிறுவர்கள் துப்பாக்கி ஏந்தியுள்ளனர். இதனைக் கண்ட உலகளாவிய தமிழர்கள் வீரம் கொண்டு உணர்ச்சி பொங்க புலிகளுக்கு ஆதரவினைப் பெருக்கி வருகின்றனர். குறிப்பாக ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்கள் இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று கேள்வி கேட்டு காண்போரை வாயடைக்க வைக்கின்றனர். உண்மைதான் சிறுவர்களும் போராட்டத்தில் குதிக்கும் அளவுக்கு விடுதலை உணர்வின் விளக்கங்கள் சென்றடைந்து போர்களும் வெற்றிக் களமாகவே தோன்றுவது போல்தான் காண்போர்களுக்குத் தெரியும்.

வியட்நாமின் விடுதலைப் போரில் சிறுவர்கள் குண்டுகளைக் கட்டிக் கொண்டு டாங்குகளின் அடியில் படுத்து அவற்றினை அழித்தனர். மறைந்திருந்து தாக்கி எதிர்த்துருப்புக்களை வீழ்த்தினர் என்றெல்லாம் விளக்கங்கள் கொடுக்கலாம். விடுதலைப் புலிகளின் ஆதரவுப் பத்திரிகையில் இப்படியான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வியட்நாமில் யுத்தம் நடைபெற்றவேளை அந்நாட்டின் மக்கள்தொகை ஐந்து கோடி. போரிட வந்தவர்களோ ஆறு லட்சம் துருப்புக்கள். அதிலும் அவர்கள் அன்னியத் துருப்புக்கள். அங்கே குழந்தைகள் பயன்படுத்தப்பட்டது கொரில்லாத் தந்திரமே இல்லாமல் போராளிகளுக்கு ஏற்பட்ட பஞ்சமல்ல. எங்கள் ஈழதேசம் பத்திரிகையில் வெளிவரும் ''உன் அடிச் சுவட்டில் நானும்'' என்ற உண்மைச் சம்பவத்தின் தொடரைப் படித்துப் பார்த்தால் புரியும் போராட்ட உணர்வுகள் எப்படியெல்லாம் வியட்நாமில் வெளிப்பட்டன, பிற இயக்கம் இன்னொரு இயக்கத்தினை எப்படியெல்லாம் நேசித்தது, விடுதலை என்ற சொல்லுக்குள் நாம் அனைவருமே சகோதரர்கள் என்ற சிந்தனை அனைவரிடத்திலும் ஆழப்பதிந்திருப்பதை அறியலாம்.

எங்கள் மண்ணில் சகோதர உணர்வா, எங்கே இருக்கிறது அப்படி ஓர் சொல்? என்றல்லவா கேட்பார்கள். வியட்நாமைப் பற்றிய எந்த உதாரணத்தையும் எங்கள் போராட்டத்துடன் இணைத்துப் பேசவே முடியாது. அதன் புனிதம், தூய்மை, சகோதர உணர்வு, சக போராளியை மதிக்கும் தன்மை, அவை எவற்றுக்கும் எம்மவரது போராட்டம் அருகில் நெருங்க முடியாது.

மிக அதிகமாக அனைவருக்கும் தீங்கு விளைவிப்பவர்கள் போராளிகள், தலைவர்கள் என்று போற்றப்படுகின்றனர். யாரைக் கொல்வது என்ற விவஸ்தையே இல்லாமல் கொலை செய்தால் அதற்குப் பெயர் விடுதலைப் போர் அல்ல. இனத்தின் மதிப்பு, உயிரின் பெறுமதி எதுவும் தெரியாத போராளிகள் போராடி யாருக்கு விடுதலையைத் தேடித்' தரப் போகிறார்கள்? இவற்றினைச் சிந்தித்து தான் அறிவுள்ள இளைஞர்கள் நாட்டை விட்டே வெளியேறிவிட்டனர். பாதிப்பேரை புலிகளே கொன்று தீர்த்து, வீரர்கள் என்று பெயர் பெற்றனர். விடுதலைப் போரை எந்த அளவுக்கு மழுங்கடித்துள்ளனர் என்பதைப் படத்திலுள்ள சிறுவர்களைப் பார்த்தால் அறிவுள்ளவர்களுக்குப் புரிந்துவிடும். இச்சிறுவர்களது பெற்றோர் எந்த அளவுக்கு இரத்தக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் புரியும். ஆனால் வெளிநாட்டிலுள்ள சில பத்திரிகைகள் பெருமைபேசி, படங்களை வெளியிட்டு மேற்கொண்டும் சிறுவர்களைத் துப்பாக்கி ஏந்தச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை நினைக்கும்போதுதான் வேதனைப்பட வேண்டியுள்ளது. எங்கள் இளஞ்சந்ததியினை அழிக்கவென பணி செய்யாதீர்கள். பேராசையும் பழி வாங்கி லாபம் தேடுவதையும் நிறுத்துங்கள் அனைவருக்குமாகவே தான் நாடு என்று சொல்லுங்கள், ஒன்றுபட்டு போராடுங்கள் என்று சொல்லுங்கள். இப்படிப் பத்திரிகைகளும் அறிவு ஜீவிகள் என்று இருப்பவர்களும் பிரசாரங்கள் என்று அலைபவர்களும் திருந்திப் பணி செய்தால் எத்தனை ஆயிரம் இளைஞர்கள் போரில் குதிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பது தெரியும். வெள்ளைக்கார நாடுகளில் படும் அவமானங்களை விட போரில் மடிய ஆயிரக்கணக்கானவர்கள் காத்திருக்கின்றனர். பலி எடுப்பதும், பலி கொடுப்பதும் மாறவேண்டும். இதற்குத் தமிழ் இனம் முன்வராவிட்டால் அவஸ்தைகள் பலவற்றை இன்னும் பல ஆண்டுகள் அனுபவிக்கத்தான் வேண்டும். இந்தச் சிறுவர்கள் சிங்கள இராணுவத்திற்கு முன்னால் நின்று போரிட வேண்டுமென்று யாருக்காவது எண்ணத் தோன்றுமா? சிந்தித்துப் பாருங்கள் தவறுகள் எங்கே இருக்கிறதென்று.





வீறு கொண்ட புலிப்படைப் போராளிகள் என்று பெருமையுடன் வெளியிட்ட சிறுவர்களது புகைப்படங்கள்.

# UNHCR தமிழ் பிரதேசத்தில் செயல்பட மறுப்பு

சிங்கள இராணுவம் யாழ்ப்பாணம் மீது மேற்கொண்ட தாக்குதலால் கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு கிளிநொச்சியிலும், வன்னியிலும் அடைக்கலம் புகுந்துள்ளனர். உறைவிடம் இன்றி வயல் வெளிகளிலும், வீதியோரங்களிலும் குடிசைகள் போட்டும், கூடாரம் அமைத்தும் வாழ்கின்றனர். சுத்தமான குடிநீர், சுகாதாரமான மலசல கூடங்கள் இல்லாததினாலும் மக்களை பலவகை நோய்கள் தாக்கி வருகிறது. நோய் தீர்க்கும் மருந்துகளும் போதுமானதாக இல்லாததால் நிலைமை மோசமடைந்துள்ளது. இந்நிலையில் அகதிகளுக்கான ஐக்கிய நாட்டின் உயர் ஸ்தானிகர் (UNHCR) எடுத்த அரும் முயற்சியின் பலனாக அரசு அரை மனதுடன் நிவாரணம் வழங்க முன்வந்தது. அரசினால் வழங்கப்பட்ட பொருட்களை, அகதிகளுக்கான ஐக்கிய நாட்டின் உயர் ஸ்தானிகர் (UNHCR) அமைப்பு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வந்தது.

மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணப் பொருட்களை, புலிகளினால் அமைக்கப்பட்ட ''தமிழ் நலன் புரி அமைப்பின்'' ஊடாகத்தான் வினியோகிக்கப்பட வேண்டும் என்று புலிகள் வற்புறுத்தினர். மக்களுக்காக வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களின் பெரும் பகுதி மக்களை சென்றடையாமல் புலிகள் அபகரித்துக் கொண்டனர். இதனை அகதிகளுக்கான ஐக்கிய நாட்டின் உயர் ஸ்தானிகர் (UNHCR) அமைப்பு வன்மையாக ஆட்சேபித்தது. இதனால் அந்த அமைப்பின் ஊழியர்கள் புலிகளால் மிரட்டப்பட்டனர். இதன் விளைவாக அகதிகளுக்கான ஐக்கிய நாட்டின் உயர் ஸ்தானிகர் (UNHCR) அமைப்பு பாதுகாப்பற்ற சூழலில் செயல்பட முடியாது என்று தமிழ் பிரதேசங்களில் நமது செயல்பாட்டை நிறுத்தியுள்ளது. இதனைச் சாக்காக வைத்து, மக்களுக்கு அரசு வழங்கும் நிவாரணப் பொருட்களை புலிகள் அபகரித்து செல்கின்றனர், புலிகளின் செயலைச் சாக்காக வைத்து தமிழ் அகதிகளுக்கு வழங்கிவந்த நிவாரணப் பொருட்களை மேலும் குறைத்துள்ளது இலங்கை அரசாங்கம். மரத்தால் வீழ்ந்தவனை மாடு மிதித்தது போல் உள்ளது இந்த அகதிகளின் நிலை.

வெறும் நவீன ஆயுதங்களாலும், தெளிவற்ற போராளிகளினாலும் ஈழத்தை வென்றுவிட முடியாது.

படிப்பகம்

www.padippakam.com





# அரச பயங்கரவாதத்துக்கு சாவு மணி அடித்த சந்திரிகா!



அரச பயங்கரவாதத்துக்கும் வன்முறை அரசியலுக்கும் சாவு மணி அடித்து விட்டதாகவும் நீதி சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றுடன் சகல மக்களும் அமைதியாக வாழக் கூடிய ஓர் தேசத்தைக் கட்டி எழுப்புவதே தனது நோக்கம் என்று சுதந்திர தின விழாவில் சந்திரிகா முழங்கியுள்ளார்.

இலங்கை மக்களில் பெரும்பான்மையோரும், சர்வதேச சமூகத்தினரும் தனது சமாதான முயற்சியினை வலுவாக ஆதரித்து வருவதாகவும் சந்திரிகா அடித்துக் கூறியுள்ளார். இவை எல்லாம் இப்படியிருக்கையில் புலிக்ள்தான் விடாப்பிடியாக வன்செயலில் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் மனமுடைந்து சோகமாகவும் கூறினார்.

ஐக்கிய இலங்கை என்ற வரம்புக்குள் பிரச்சனைகளைத் தீர்ப்பதே தனது உறுதியான முடிவு என்று சபதமெடுத்தார் சந்திரிகா!

இவரது பேச்சில் அரச பயங்கரவாதத்துக்கும், வன்முறை அரசியலுக்கும் சாவு மணி அடித்ததாகவும் கூறினார். சந்திரிகா ஆட்சிக்கு வந்த பின்னர் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் களனி ஆற்றிலும் கடற்கரை ஓரங்களிலும் அரச உளவுப் படைகளால் படுகொலை செய்யப்பட்டு முகங்கள் சிதைக்கப்பட்டு வீசி எறிந்து, அவை கரைகளில் ஒதுங்கியதை நாங்கள் மறந்து விடவில்லை. இன்று எத்தனை தமிழ் இளைஞர்களை கொன்று புதைத்து வருகிறார் என்பது வெளியுலகுக்கு தெரிய வாய்ப்பில்லை. அனைத்தும் இரகசியமாகவே நடைபெறுகின்றன.

தனது தீர்வுத் திட்டத்தை எல்லோரும் ஆதரிப்பதாகக் கூறியுள்ளார். ஏற்க வேண்டியது தமிழ் மக்கள் அல்லாமல் சிங்களவரோ பறங்கியரோ அல்ல. தனது திருத்தத்தில் கூட புத்தமதம் அரச மதம் என்றும் அதனை வளர்ப்பதும் பாதுகாப்பதும் அரசின் கடமை என்றும் இரண்டாவது அத்தியாயத்தை பௌத்தத்துக்கு ஒதுக்கியுள்ளார். சந்திரிகா புதிய திருப்பத்தை கொண்டு வருபவர் என்றால் ''இலங்கையை ஓர் மத சார்பற்ற நாடு'' என்று அறிவிக்கட்டும் பார்க்கலாம். அப்படி அறிவித்தால் பிக்குகள் அனைவரும் கல்லால் அடித்தே சந்திரிகாவை கொன்றுவிடுவார்கள். புத்தர்களது தீர்வுதான் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு. இதிலிருந்து சந்திரிகா வேறுபட முடியாது.

ஐக்கிய இலங்கையில்தான் பிரச்சனை தீர்க்கப்படும் என்றுள்ளார். ஐக்கிய இலங்கையை சூறையாடியதே பண்டாரநாயக்காவும், சிறிமாவோவும்தான் என்பது சந்திரிகாவுக்கு தெரிந்திருக்காது. யாழ்ப்பாணத்துக்கு இராணுவத்தை அனுப்பி பண (ஜெபம்) ஓதியா கைப்பற்றினார். வன்முறையைத்தானே சந்திரிகா பயன்படுத்தினார். ஐந்து லட்சம் பேரை அகதிகளாக்கிவிட்டு அடிப்படை அத்தியாவசிய தேவைகளையும் நிறுத்திவிட்டு, தமிழ் மக்கள் படும் துயரத்தை ரசித்து வரும் சந்திரிகா சுதந்திர தின விழாவில் காருண்யம் பேசுகிறார். மக்களை ஏமாற்ற விழாவும், அதற்கு பாதுகாப்பும்.



சுதந்திர தின விழாவில் வெடிகுண்டு தேடும் சந்திரிகா!



வாவிகளில் சிதையுண்டு மிதக்கும் தமிழர்களின் உடல்கள்

## சன்ரைஸ் வானொலிக்கு ஈ.என்.டி.எல்.எப் பிரதிநிதி பேட்டி

இலங்கை அரசினால் வெளியிடப்பட்டிருக்கும் அரசியல் தீர்வு சம்பந்தமாக சன்ரைஸ் வானொலி (லண்டன்) யின் தமிழ் சேவைக்கு 30-01-96 அன்று ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் லண்டன் கிளைச் செயலாளர் ராம்ராஜ் அளித்த பேட்டியின் விபரம்.

இந்த அரசியல் தீர்வுத் திட்டத்தை நிராகரிக்க வேண்டுமென்று பெரும்பான்மையான தமிழ் மக்கள் அபிப்பிராயம் கொண்டுள்ளனர். சந்திரிகா அறிவித்துள்ள தீர்வுத் திட்டத்தில் கபடம் நிறைந்துள்ளதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டுவதன் மூலம், எமது வரலாறு மிக்க போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்வதோடு, உலக நாடுகளில் இலங்கை அரசுக்கு கிடைக்கின்ற ஆயுத உதவி, நிதி உதவி போன்றவற்றை நிறுத்துமாறு கேட்டுக் கொள்ள ஒரு சந்தர்ப்பமாக அமையும். அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான செயல் திட்டம் வெறும் கண் துடைப்பாகவே காணப்படுகிறது. முக்கிய பிரச்சனையான தமிழர்களின் தாயகக் கோட்பாடு பற்றியோ, வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றியோ, எவ்வித திடகாத்திரமான பிரயோசனமான திட்டங்களும் இல்லை. வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இருவகைக் கூறாக வரையறை செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு இந்த திட்டம் மறுதலிப்பையே செய்துள்ளது. ஒன்றிணைப்பு நிரந்தரமாக்கப்படுவது தொடர்பாக மக்களின் தீர்ப்புக்கு இப்பிரேரணை விடப்படல் வேண்டுமென்ற 13வது திருத்தத்தில் இதனைச் சொல்கின்றது. இனவாதம் மேலோங்கிய இந்நிலையில் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் எவ்வாறு இதற்கு ஒப்புதல் அளிப்பார்கள். இனவாதச் சிங்கள அரசியல்வாதிகளின் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டிருக்கும் வரை அது வெறும் கானல் நீர்தான். எனவே நமது தாயகப் பிரதேசத்தின் இணைப்புக்கு நாம் பெரும்பான்மை சமூகத்திடம் கையேந்த வேண்டிய நிலைமை. அத்தோடு அதிகாரப் பரவலாக்கல் குறித்த பிரேரணைகள் நடைமுறைப்படுத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட வேண்டும். இன்று இனவாதப் பெரும்பான்மையை பாராளுமன்றப் பிரதிநிதிகளும், ஏனைய குழுக்களும் ஒன்றிணைந்து வடக்கு - கிழக்கு ஒன்றிணையக் கூடாது என்பதில் தொடர்ந்து உறுதியாக உள்ளனர். இந்நிலையில் சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் எப்படிப் பயனுள்ளதாக இருக்க முடியும்? அடுத்து வடக்கு - கிழக்கு எல்லைகள் தொடர்பாக மிகவும் ஏமாற்றத்தையே தருகின்றது. இன்று சிங்கள குடியேற்றங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எல்லைப் பிரதேசங்கள் தொடர்பாக உறுதியான கருத்துக்கள் எதுவும் இந்த தீர்வுத் திட்டத்தில் இல்லை.

அரசியல் தீர்வுத் திட்டங்கள் பற்றி பௌத்த மதத்தினருக்கு விசேட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மகாசங்கத்தினரின் உயர் கவுன்சில் ஒன்றையும் உருவாக்க இத்திட்டம் துணை செய்கின்றது. இது மிகுந்த ஆபத்தையும், அழிவையும் ஏற்படுத்தும் செயலாகும். இப்பொழுது இலங்கை அரசு பௌத்த பிக்குகளிடம் அகப்பட்டுத் தவிப்பதைக் காண்கின்றோம். இன்றைய இனப் பிரச்சனையின் சிக்கலுக்கு பௌத்த பீடங்களின் பிக்குகளும் ஒரு முக்கிய காரணமாகும். இவ்வாறன அபாயகரமான பௌத்த பீடங்களுக்கு மேலும் அரசியல் அந்தஸ்து அளிப்பதுதான் எமது பிரச்சனைக்கு மேலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதற்கு முக்கிய காரணமாகும்.

ஜனாதிபதி பிரதேச சபை அரசியல் அமைப்பை மீறுகின்றதென்ற அபிப்பிராயம் கொண்டால் உடனடியாக எல்லா அதிகாரங்களையும் கைவிட்டு பிரதேச சபையைக் கலைக்க முடியும். இவ்விடயத்தில் நீதிமன்றங்கள் கூட தலையிட முடியாதவாறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இன்று நீதிமன்றம் பிரவேசத்தை நிராகரிப்பதானது அதிகாரப் பரவலாக்கத்தின் அனைத்து அம்சங்களையும் கேலிக்கூத்தாக்குகின்றது. எனவே இந்த சிங்கள அரசின் தீர்வுத் திட்டத்தை நிராகரிப்பதாகப் பொது எதிரிக்கு எதிராக நட்பு சக்திகள் அனைத்தும் ஒருங்கிணைந்து போராட வேண்டும். அதன் மூலம் வெளிநாடுகளில் உள்ள தமிழீழப் போராட்டத்தில் ஆர்வமுள்ள இளைஞர்களைக் களத்தில் குதிக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். கடந்த காலத் தவறுகளை பரிசீலிக்குமாறும், தனி நபர் பயங்கரவாத நடவடிக்கையை சர்வதேச ரீதியிலான ஜனநாயக விரோத அடாவடித்தனங்களைக் கைவிடுமாறும் அதன் மூலம் சர்வதேச மக்களின் கருத்தை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவானதாகத் திருப்புவோம், ஒன்றுபடுவோம், செயல்படுவோம் என்று பேட்டியின்போது ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் லண்டன் கிளைச் செயலாளர் ராம்ராஜ் குறிப்பிட்டுள்ளார்.

**மக்கள் மீது திணிக்கப்படும் எவ்வகையான சட்டங்களும், கட்டுப்பாடுகளும் வெற்றி அடையாது.**

படிப்பகம்

www.padippakam.com



# புலிகளும் யாழ்ப்பாண மக்களின் வெளியேற்றமும்



இலங்கையின் மனித உரிமைக் குழுவான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (U.T.H.R) அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. அதில் கடந்த கார்த்திகை மாதம் முற்பகுதியிலே விடுதலைப் புலிகளால் நிர்ப்பந்தம் செய்யப்பட்டு யாழ்ப்பாண நகர மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டபோது நடைபெற்ற சம்பவங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்கள் வீடுகளை விட்டு வெளியே செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட தமிழ் மக்கள் பலர் புலிகள் மீது கோபமும் கசப்புணர்வும் கொண்டிருக்கின்றார்கள் என்று சுட்டிக் காட்டுகிறது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் (U.T.H.R) அறிக்கை. தமிழ்க் கலாச்சாரமும் அதன் பாரம்பரியங்களும் அழிக்கப்படுவதற்கு விடுதலைப் புலிகள் காரணமாகி விட்டார்கள் என்று குற்றம் சாட்டியுள்ளது.

கார்த்திகை மாதம் முற்பகுதியிலே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இலங்கை இராணுவம் தனது தாக்குதலைத் தொடங்கிய மறு நிமிடமே வரலாறு காணாத சம்பவத்தினை யாழ்ப்பாண மக்கள் எதிர் கொண்டனர். யாழ்ப்பாண நகரத்தில் 600 ஆண்டு கால வரலாற்றில் முதல் முறையாக அனேகமாக அனைத்துக் குடும்பங்களும் வெளியேற்றப்பட்டார்கள். யாழ் நகருக்குள் ஏற்கனவே அகதிகளாக வந்து அங்கு பலவிதமான கஸ்ரங்களையும் துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்த பெருந்தொகையான மக்களும் யாழ்ப்பாணக் கடல் நீர் ஏரியைக் கடந்து, வயல் வெளிகளைக் கடந்து, பாதுகாப்பான பல்வேறு இடங்களுக்கு, பயந்து தங்களது உயிர்களைக் காத்துக் கொள்ள ஓடினார்கள். அந்த நாட்களில் செய்தித் தணிக்கை அமுலில் இருந்தது. செய்தியாளர்கள் கூட அப்பகுதிகளுக்குச் செல்ல விடாமல் தடுக்கப்பட்டார்கள் இராணுவத்தினரால். அந்தக் காலகட்டத்தில் அப்பகுதிகளில் என்ன நடந்தது என்பதை அறிவது அவ்வளவு இலகுவானதல்ல.

ஆனால், இலங்கையின் மனித உரிமைக் குழுவான, ''யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (U.T.H.R)'' என்ற அமைப்பு யாழ் நகரில் இருந்து தப்பிப் பிழைத்து அகதிகளாக முகாம்களில் அல்லல்ப்படும் தமிழர்களிடம் நீண்ட நாட்களாக அவர்களுடைய உண்மையான, பலவிதமான கண்ணீர்க் கதைகளைக் கேட்டறிந்து விரிவானதொரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது. அதில் யாழ்ப்பாணத்தில் இருந்து பெரும்பாலான மக்கள் வெளியேற்றம் ஏன் நடந்தது? எப்படி நடந்தது? அதன் பின்னர் என்ன நடந்தது? என்பதையெல்லாம் அவ்வறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பொதுமக்களின் நலனைக் காட்டிலும் தங்களது சொந்த அரசியல், மற்றும் முக்கிய காரணங்களுக்காகவே தமிழ் மக்களை வெளியேற்ற உறுதி கொண்டிருந்தார்கள். ஐப்பசி மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொருவரும் அன்றிரவே தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டும் என்று விடுதலைப் புலிகள் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தனர். யாழ்ப்பாணத்தை விட்டு மக்கள் வெளியேறுவதற்கு 4 மணி நேரம் மட்டுமே வழங்கப்பட்டது. தங்களது சொத்துக்கள், உடமைகள் மற்றும் அனைத்துப் பொருட்களையும் அப்படியே கைவிட்டு உடுத்த உடைகளுடன் வடமாராச்சியை நோக்கி கொட்டும் மழையில் இரவு பகலாக சிறு குழந்தைகளையும் சுமந்து கொண்டு உண்ண உணவின்றி நனைந்த உடைகளுடன் தங்களது துயரப் பயணத்தை நடந்து முடித்திருக்கிறார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் பிரசவத் துடிப்பினால் அவதியுற்ற பல கர்ப்பிணிப் பெண்கள், தங்கள் குழந்தைகளை தெருவோரங்களில் பிரசவித்துள்ளனர். குழந்தைகளைப் பெற்றெடுத்து எப்படியெல்லாம் வளர்த்து ஆளாக்க வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்த இவர்களது ஆசைகள் எல்லாம் இப்படி நாசமாக எமது இனத்தவர்களே காரணமாகி விட்டனர் என்று எண்ணும் போது நெஞ்சு துடிக்கிறது. சிறு குழந்தைக்ள் குளிரினால் விறைத்து இறந்து போன கண்ணீர்க் கதைகள் எம்மைக் கதிகலங்க வைத்தது.

ஒரு வாரம் கழிந்த பின்னர் புலிகளுக்குச் சார்பான 'ஈழநாடு' என்ற பத்திரிகையில் சிங்கள ஆட்சியின் கீழ் தமிழ் மக்கள் வாழ விரும்பவில்லை என்பதையே மக்களின் வெளியேற்றம் உணர்த்துவதாக விபரித்திருந்தது. யாழ்ப்பாண மக்கள் பெருமளவு பேர் வீட்டை விட்டு வெளியேற விரும்பவில்லை, பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்து விட்டு இராணுவம் பூரண கட்டுப்பாட்டிற்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கை

குள் வந்த பின் தங்கள் வீடுகளுக்குச் செல்ல விரும்பினார்கள். வெறும் 4 மணி நேர அவகாசத்தில் அனைத்துக் குடிமக்களும் வெளியேற வேண்டும் என்று கட்டளைப் பிறப்பிக்க வேண்டிய அவசியம் புலிகளுக்கு இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு சிங்கள இராணுவத்தினர் தாமதமாகவே வந்தார்கள். யாழ் நகரை விட்டு வெளியேற மறுத்த பிடிவாதமிக்க மக்களை மிரட்டலினாலும், அச்சுறுத்தலாலும் நிர்ப்பந்தித்து வெளியேற்றப் புலிகளுக்கு மேலும் இரண்டு வாரம் பிடித்ததையும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. புலிகள், தமிழ் மக்கள் அகதிகளாக யாழ் நகருக்குள் தங்கி இருந்த முகாம் மீதும் வெத்து வேட்டுச் செல்லடி நடத்தியுள்ளனர். பின்னர் மக்கள் தங்கியிருந்த வீடுகள் சுற்றி வளைக்கப்பட்டு, உள்ளே இருந்தவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்பட்டனர். துரோகிகள் என்று குற்றம் சாட்டப்பட்டார்கள்.

கார்த்திகை மாதம் 12ம் திகதி அன்று அதாவது மக்கள் வெளியேறத் தொடங்கி இரண்டு வாரம் கழித்து, நள்ளிரவு வேளையில் ஒரு மகளீர்க் கல்லூரி வாயிலைத் தகர்த்த புலிகள் உள்ளே தஞ்சம் புகுந்திருந்த அகதிகளை லொறி வண்டிகள் மூலம் வெளியேற்ற நிர்ப்பந்தித்தார்கள். பின்னர் கைவிடப்பட்ட வீடுகளில் இருந்து புலிகள் பெறுமதி வாய்ந்த பொருட்களை லொறிகளில் ஏற்றிச் சென்றனர். வீட்டுக் கூரைத் தளபாடங்கள் உட்பட வீடுகளையும் துடைத்தெடுப்பதில் புலிகள் தீவிரமாக ஈடுபட்டார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், யாழ் மருத்துவமனையும் தளபாடங்களுக்காகத் துருவித் தேடப்பட்ட வேளையில், பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பத்திரங்கள், நிழற்படங்கள் போன்றவைகள் கைவிடப்பட்டன. இராணுவத்திற்கு எதிராக யாழ் நகரைத் தாக்குப் பிடிக்க முடியாது என்று புலிகள் முன்னரே தீர்மானித்து விட்டிருந்தனர். ஒரு குறுகிய பயனற்ற இராணுவப் போராட்டத்திற்காகப் புலிகள் ஈழத் தமிழ் மக்களின் கலாச்சாரத்தையும், பாரம்பரியப் பிரதேசத்தையும் பலி கொடுத்து விட்டார்கள் என்று இலங்கையின் மனித உரிமைக் குழுவான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (U.T.H.R) புலிகள் மீது குற்றம் சாட்டியுள்ளது.

இந்த அறிக்கையில் சுவாரஸ்யமான அம்சம் என்னவென்றால், புலிகளுக்கு எதிராகப் பல தமிழ் மக்கள் கொண்டிருக்கும் கோபத்தையும் கசப்புணர்வையும் தெளிவுபடுத்துவதாகும். இந்த விபரத்தைக் கடந்த ஆறு ஆண்டு காலப் பின்னணியை வைத்துக் கொண்டே பார்க்க வேண்டும். இந்த காலப் பகுதியிலே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் நடந்த கருத்து வேறுபாடுகள் அனைத்தும் இரக்கமின்றி அடக்கப்பட்டுள்ளன. மக்கள் இடம் பெயர்வதற்கு முன்னரும் பின்னரும் அகதிகளிடையே கருத்து வேறுபாடுகள் வெளிப்படையாகவே அலை மோதியுள்ளன. இதன் காரணமாக பல வாரங்களாக விடுதலைப் புலிகள் நிர்வாகப் பணிகளையோ, நிவாரண உதவிகளையோ கொடுக்க மறுத்து விட்டனர். பல தடவைகள் புலிகளின் காவல்த் துறையினர் மக்களால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் அடாவடித்தனமும், சிறுவர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளப் புலிகள் காட்டிய வேகமுமே பொதுவான எதிர்ப்பைத் தூண்டிவிட்டது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று அகதி முகாம்களில் வாழும் தமிழ் மக்கள் ஒரு வேளை உணவுக்கே தவித்துக் கொண்டு பட்டினியால் வாடுகின்றனர். தங்களது குழந்தைகள் பசியினால் வாடும் துயர் தாங்க முடியாமல் தவிக்கின்றார்கள். இப்படியான கொடுமைகளுடன் இன்னும் இவ்வுலகில் வாழ வேண்டுமா என்று விரக்தியுற்ற சில குடும்பத்தினர் குழந்தைகளுக்கும் விஷம் கொடுத்துவிட்டு தாங்களும் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்த இக்கட்டான சூழ்நிலையில் மக்கள் தவிக்கும்போது, புலிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் இருப்பதற்கு குடிசைகளும், உணவுப் பொருட்களும் வழங்குகின்றனர். இவர்களது குழந்தைகள் உணவு உண்ணும்போது தங்கள் குழந்தைகள் பட்டினியால் வாடுகின்றனரே இதையெல்லாம் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். இக்கொடுமைகளைக் காணாமல் நிம்மதியாக இறந்து விடுவதே மேல் என்று இந்த மக்கள் விரக்தியுறுவதற்கு எல்லாவிதத்திலும் புலிகளே காரணமாக இருந்துள்ளனர் என்பதே உண்மை.

இந்த அறிக்கையில் அரசு கூட கடுமையான விமர்சனத்திற்குள்ளாயிருக்கிறது. யாழ்ப்பாண எல்லைகளுக்குள்ளே தவிர மக்கள் தஞ்சம் புகுந்திருந்த ஏனைய இடங்களில் நிகழ்த்திய குண்டு தாக்குதல்களுக்கும், எறிகணைத் தாக்குதல்களுக்கும் இராணுவத்தை இந்த அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது.



அடக்குமுறை தற்காலிக வெற்றிகளாக காட்சி தந்தாலும் எதிர்கால தோல்விகளாகவே முடியும். இன்றைய ஈழத்தின் நிலையும் இதுவே.

படிப்பகம்

www.padippakam.com



# கேளுங்கள்



**கேள்வி:** சந்திரிகா அறிவித்துள்ள தீர்வுத் திட்டம் மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறதே. தொடர்ந்து எவ்வளவு காலத்திற்குச் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை ஏமாற்றப் போகிறார்கள்?

ச.மனோகரன்
எல்லிஸ் நகர்,
மதுரை.

**பதில்:** இந்தத் தீர்வுத் திட்டம் மட்டுமல்ல சிங்கள ஆட்சியாளர்கள் எந்த தீர்வுத் திட்டத்தை வைத்தாலும் அது தமிழர்களை ஏமாற்றுவதற்கானதாகவே இருக்கும். இது சிங்கள வரலாற்றில் மட்டுமல்ல. சந்திரிகாவின் பரம்பரையிலும் வழி வந்ததுதான். சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை ஏமாற்றுவது புதிது மல்ல, ஆச்சரியமானதுமல்ல. ஆனால் சந்திரிகாவுக்கு தமிழ்க் கட்சிகளும், தமிழ் போராளிக் குழுக்களும் துணை போவதுதான் வேதனைக்குரியது. சந்திரிகா முன் வைத்துள்ள தீர்வுத் திட்டத்திற்கு அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறது கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள், ஈழத் தமிழர்களை ஏமாற்ற இந்தத் தமிழ்க் குழுக்களும் ஒரு வகையில் காரணம்தான்.

சந்திரிகா ஜனாதிபதியாக பதவி ஏற்றதும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை திட்டமிட்டு ஆரம்பித்தார். ஜனநாயக வழிக்குப் புலிகளால் வ்ர முடியாது என்பதனை நன்கு அறிந்து கொண்டு அதனைப் பயன்படுத்தும் வகையிலும் எல்லோரும் பாராட்டும் வகையிலும் ஒரு தீர்வுத் திட்டத்தை அறிவித்தார். அதனை புலிகளுடன்தான் விவாதிக்கப்பட வேண்டும் என்றார். கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் விவாதிக்க முன் வந்தும் அதனை சந்திரிகா கண்டு கொள்ளவில்லை. புலிகள் மட்டும் கொஞ்சம் பொறுமையைக் கடைபிடித்து தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தால் சந்திரிகாவின் சுயரூபம் தெரிந்திருக்கும். ஆனால் சந்திரிகா உண்மையாகவே தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கி சமாதானத்தை ஏற்படுத்தி விடுவார் என்ற பயத்தில் புலிகள் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டனர். இதைத்தான் சந்திரிகாவும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

நாடு பிரிவது தவிர்த்து தமிழர்கள் கோரும் எல்லா உரிமைகளையும் வழங்குவதாகவும், அதனை புலிகள்தான் எதிர்க்கிறார்கள் என்றும் நாடகமாடி உலகை நம்ப வைத்தார். சந்திரிகா எல்லோரையும் ஏமாற்றுகிறார். அவருக்கு ஆதரவு நல்க வேண்டாம் என்று E.N.D.L.F கோரிக்கை விடுத்தும், அதனை உதாசீனப்படுத்திவிட்டு சந்திரிகாவுக்கு முழு ஆதரவையும் கொழும்பில் இருக்கும் தமிழ்க் குழுக்கள் வழங்கினர். புலிகள் ஒரு பயங்ரவாதக்குழு. E.N.D.L.F பிரிவினைவாதிகள். கொழும்பில் உள்ள தமிழ் குழுக்கள்தான் சமாதான முறையில் இனப் பிரச்சனைக்கான தீர்வைக் காண ஒத்துழைக்கிறார்கள். இவர்களே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனும் தோற்றத்தை உருவாக்கினார் சந்திரிகா.

இந்த மாயையை நம்பி பல நாடுகள் புலிகளை அழிக்கவும், சமாதானத்தை ஏற்படுத்தவும், சந்திரிகாவுக்கு உதவிகளை நல்கினர். இதற்கு புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளும், சந்திரிகாவுக்கு ஒத்துப் பாடிய தமிழ்க் குழுக்களின் செயல்களும் சந்திரிகாவுக்கு சாதகமாக அமைந்தது என்பது மறுப்பதற்கில்லை. அரசியல் ரீதியாகப் புலிகளை பலவீனப்படுத்தி, கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களை தமிழர் தலைவர்களாக்கி தன்வசப்படுத்திய பின்னரே யாழ்ப்பாணம் மீது போர் தொடுத்தார்.

யாழ்ப்பாணம் மீது இராணுவம் தாக்குதலை மேற்கொண்டபோது, அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும். தமிழர் உடைமைகளை கொள்ளையடித்தும், அழிக்கவும் செய்தனர். இதனை இந்தியா உட்பட உலக நாடுகள் அறிந்திருந்தும் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே, கண்டிக்காமல் மௌனம் காத்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் புலிகளின் முதுகெலும்பை உடைக்கும் வரை அனைவரின் ஆதரவும் தேவை என்பதால்தான் தீர்வுத் திட்டத்தை முன் வைக்காமல் இளுத்தடித்தார் சந்திரிகா. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும் தமிழர்களை ஏமாற்றும் திட்டத்தை வெளியிட்டு தன் சுயரூபத்தை காட்டினார். சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாற்றி விட்டதாகக் கடந்த 48 ஆண்டுகள் பாடிய பல்லவியைத்தான் இப்போதும் கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்கள் பாடுகின்றனர். தொடர்ந்து பாடுவார்கள். ஏனெனில் அவர்கள் நடத்துவது அரசியல் வியாபாரம்.

எந்தத் தமிழ்க் குழுவும் சுயநலத்திற்காக சந்திரிகாவின் பராமரிப்பிற்கு உட்படாமல் சுயகௌரவத்துடன் தமிழர் நலனில் அக்கறையுடன் இருந்திருந்தால் சந்திரிகாவின் ஏமாற்றுத் திட்டத்தை தவிர்த்திருக்கலாம். சுயநலத்திற்காக சிங்கள ஆட்சியாளர்களிடம் யாசிப்பதை நிறுத்தாமல், விட்டுக் கொடுப்புகளுடன் ஒன்றிணையாமல் இருக்கும் வரை சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்து தமிழர்களை ஏமாற்றிக் கொண்டுதான் இருப்பார்கள்.

●

**கேள்வி:** இலங்கை அரசு தமிழர்களுக்கான உரிமையை வழங்கி இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பார்களா? அல்லது புலிகள் ஈழம் அமைத்து பிரச்னையை முடிவுக்குக் கொண்டு வருவார்களா? தமிழ் மக்கள் இன்றைய நிலையில் என்ன செய்ய வேண்டும்?

மா.கரன்
அகதி முகாம்
செந்தாரப்பட்டி.

**பதில்:** இலங்கை அரசு தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கி இனப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கப் போவதில்லை என்பது கடந்த கால வரலாறு மூலம் தெரிந்தவையே. அப்படியே சந்திரிகா விதிவிலக்காக இருந்தாலும் சிங்கள இன வெறியர்கள் இதனை எதிர்த்து தீர்வினை இல்லாமல் செய்து விடுவார்கள். ஆகவே இலங்கை அரசு தமிழர் பிரச்சனையைத் தீர்த்து வைக்கப் போவதில்லை. ஆதலால் ஈழத் தமிழர் பிரச்சனைக்கு தனி ஈழம் அமைப்பது ஒன்றே நிரந்தரத் தீர்வுக்கு வழி வகுக்கும்.

புலிகளால் தனி ஈழம் அமைக்க முடியாது. ஏனெனில் ஒரு விடுதலை இயக்கத்திடம் இருக்க வேண்டிய குணாம்சம் புலிகளிடம் இல்லை என்பதுதான். முக்கியமாக மக்களை நேசிக்கின்ற தன்மை புலிகளிடம் இல்லை. மக்கள் மனமுவந்து புலிகளை ஆதரிக்கவில்லை, கொலை செய்யப்படுவதிலிருந்து தப்பவே அவர்கள் சொல்வதை எல்லாம் கேட்கிறார்கள். ஆரம்பத்திலிருந்தே புலிகள் மக்களிடமிருந்து விலகி இருந்தே போராட்டம் நடத்தியது. அனைத்துப் போராளிக் குழுக்களும் போராட்டத்தை மக்கள் மயப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளையில், புலிகள் மட்டும் நாங்கள் போராடுகிறோம் அதற்கு ஆதரவு தந்தால் போதும் என்று பிரச்சாரம் செய்தது.

மக்களின் விமர்சனங்களுக்கு இயக்கங்கள் மதிப்புக் கொடுத்து அதற்கு பதில் சொல்வதைக் கடமையாகக் கொண்டிருந்தனர். புலிகளோ தங்களை விமர்சனம் செய்தவர்களைத் தண்டித்தனர். சில நேரங்களில் தங்களின் தவறுகளை மறைத்து திசை திருப்புவதற்காக சிங்கள இராணுவம் மீது தாக்குதல் நடாத்தியதும் உண்டு. இதன் பதில் நடவடிக்கையின் விளைவாக சிங்கள ராணுவம் மேற்கொள்ளும் தாக்குதலில் அப்பாவி மக்களே கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் போக்கின் வளர்ச்சியே சகோதர இயக்கங்களையும் கொலை செய்யத் தூண்டியது. இவர்களின் கோரப்பிடியில் பலியான போராளிகளின் பெற்றோர்கள் வாய்விட்டு அழக்கூட அஞ்சினர். இந்தப் பயங்கரச் செயல்களை மக்கள் தட்டிக் கேட்கவில்லை. கண்டிக்கவும் பயந்தனர். தமிழகத்தில் சில தலைவர்கள் இதனை வீர தீரச் செயலாகக் கூடப் புகழ்ந்தனர்.

நியாயமான போராட்டங்களுக்கு உலக நாடுகள் என்றுமே அங்கீகரிக்கத் தவறியதில்லை. தென் ஆப்ரிக்கா அதிபர் நெல்சன் மன்டேலா, பாலஸ்தீன அதிபர் யாசிர் அரபாத் போன்ற தலைவர்கள் நடாத்திய போராட்டத்தை உலக நாடுகள் அங்கீகரித்து வெற்றிக்கும் வழி வகுத்தனர். ஆனால் பிரபாகரனை யாரும் ஒடுக்கப்பட்ட இனத்தின் தலைவராகவோ, புலிகளை யாரும் நசுக்கப்படும் அப்பாவி மக்களின் விடுதலைக்கான இயக்கமாகவோ காண்பதில்லை. மாறாக பயங்கரவாதிகளாகத் தான் காண்கின்றனர். புலிகளின் செயல்பாடுகளை உலகம் நிராகரித்ததால்தான் சந்திரிகாவுக்கு ஆதரவு பெருகியுள்ளது. ஈழத் தமிழருக்குச் சரியான தலைமை, சரியான் பாதை இல்லாததினால்தான் சந்திரிகாவின் போக்கிற்கே விட்டு பிரச்சனைத் தீர்க்க உலக நாடுகள் முனைகின்றன.

மக்கள் ஒன்று திரளவேண்டும். புலிகளின் செயல்பாடுகளையும், கொள்கைகளையும் நிராகரிக்க வேண்டும். ஈழத் தமிழர் அனைவருக்கும்தான் ஈழமே அல்லாமல் ஓர் இயக்கத்தினுடைய ஏகபோக சொத்து என்னும் சிந்தனையை மாற்ற வேண்டும். தனக்கு மட்டும்தான் எல்லாம் என்று எண்ணுபவர்கள் எப்படி விடுதலை வீரனாகவோ, தியாகியாகவோ இருக்க முடியும்? பேராசையும், சுயநலமும் தான் அனைவரையும் பிடித்து ஆட்டிவிக்கிறது. கொழும்புத் துரோகிகள் ஒதுக்கப்பட வேண்டும். மக்கள் ஒன்றுபட்டு சரியானதை அடித்துக் கூறவேண்டும். ஒன்றுபட்ட தலைமையின் கீழ் போராடினால் நிச்சயம் தனி நாடு உண்டு.

●

**கேள்வி:** கல்வி கற்க வேண்டிய சிறார்களை, நாட்டை மீட்ட பின்பு படிக்கலாம். இப்போது போரில் ஈடுபடும்படி அழைத்து செல்கின்றனரே புலிகள் இதனால் இளம் சந்ததியினரின் எதிர்காலம் பாழாகாதா?

திரு. தியாகராஜா,
புதுக்கோட்டை.

**பதில்:** நிச்சயமாக, பாழாவது மட்டுமல்ல தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்காலமே இருள்மயமாகிவிடும். ஏற்கனவே சிங்கள ஆட்சியாளர்களின் திட்டமிட்ட சதியினால் தமிழர் கல்வி மோசமான நிலையை அடைந்துள்ளது. எந்தச் சதியினை முறியடித்து கல்விக்காகப் போராட வேண்டிய நிலையில் உள்ள தமிழினம் புலிகளின் இந்த நடவடிக்கையினால் இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

சமூக அரசியல் பார்வையன்றி பயங்கரவாதக் கண்ணோட்டம் கொண்ட செயற்பாட்டிற்கு எம் இனம் வீணாகிக் கொண்டிருக்கிறது. இளைய சமுதாயம் அழிவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாண முற்றுகையின்போது சிங்கள இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட புலிகளில் 90 சதவீதமானோர் 13 வயதுக்குட்பட்ட சிறுவர்களே. துப்பாக்கியை அணைத்தபடியே இறந்து கிடந்த இந்தச் சிறுவர்களைப் படம் பிடித்த இராணுவத்தினர் அதனை வெளியிடவில்லை. யுத்தத்தில் தங்களால் கொல்லப்பட்டது இந்தச் சிறுவர்கள் தானா என்று சிங்கள இனம் வெட்கப்படும் என்பதனாலோ என்னவோ அந்தப் படங்களை இராணுவம் வெளியிடவில்லை. பெற்றோரின் அரவணைப்பில் நல்லொழுக்கம், சமூக நீதிகள், வளமான கல்வியைப் பெற வேண்டிய நம் சிறுவர்கள் வறட்டுத்தனமான கொள்கைகளின் தூண்டுதலுக்கு பலியாகி துப்பாக்கிகளை அரவணைத்துக் கொண்டு அழிவைத் தேடுவதன் மூலம் எங்கள் இனம் திசை தெரியாமல் சிதைந்து செல்கிறது என்பது வெளிப்படையானதே. மேலே பாருங்கள் இந்தச் சிறுவர்களெல்லாம் போராடி எமக்கு விடுதலை வேண்டுமா? ஏன் இந்தப் பஞ்சம் வந்தது. இளைஞர்கள் எங்கே? அழிக்கப்பட்டு விட்டனர்! அல்லது விரட்டப்பட்டு விட்டனர்! யாரால் அழிக்கப்பட்டது? புலிகளால், யாரால் விரட்டப்பட்டது? அது



வும் புலிகளால்தான். எதற்காக அழிக்கப்பட்டனர்? தனக்கு மட்டுமே நாடு, தலைமை என்ற சுயநலக் கொள்கை என்பதுதானே உண்மை. இனிமேல் சிறுவர்களை வைத்துப் போராடி விடுதலை கண்டு யார் வாழப் போகிறார்கள்? இருக்கும் சந்ததியைக் காப்பாற்றாது, இனி வரப்போகும் சந்ததியை சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கச் செய்யப் போகிறோம் என்று ஏன் இல்லாத ஊருக்கு வழி காட்டுகிறார்கள்? இளம் சந்ததியினரின் எதிர்காலம் பாதிக்கப்பட்டது தான். அதனை நிவர்த்தி செய்ய நாம் அனைவரும் புதிய முயற்சியினை மேற்கொண்டால் உண்டு நன்மை.

*ஈழ விடுதலைப் போராட்டத்தினால் ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் போராட்டம் தொடர்பான ஆலோசனைகள் "ஈழ தேசத்திற்கு எழுதினால் தரமானவை பிரசுரிக்கப்படும்.*

**யாசித்து பெறுவது சுதந்திரம் அன்று. ஏனெனில் சுதந்திரம் எமது பிறப்புரிமை.**

படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கண்ணோட்டம்

அன்புள்ள ஆசிரியருக்கு தங்களது 'ஈழ தேசம்' பத்திரிகையை தொடர்ந்து படிக்கும் வாசகன் நான்.

கோடையாய் நீளும் துயரங்கள் போல் எவ்வளவோ நீண்ட கஸ்ரங்கள், துயரங்கள் சோகங்கள் மத்தியில்,சொந்த பூமி, சொந்த பந்தங்கள், வீடு, நிலம், தோட்டம் அனைத்தும் இழந்து அகதிகளான ஈழத் தமிழர்கள் இந்தியா முதல் ஐரோப்பிய நாடுகள் வரை பிரிந்து வாழ்கின்றார்கள். இவர்களின் சொந்த கலாச்சாரங்கள் பண்பாட்டு வாழ்க்கை முறைகள் அனைத்தும் இன்றும் அவர்கள் வாழ்கின்ற நாடுகளின் கலாச்சாரங்களுடன் இ ணங்க மாறுபட்டதாகவே காணப்படுகின்றது. எவ்வளவோ இழப்புக்கள் எவ்வளவோ துயரங்கள் மத்தியிலும் தமிழன் எங்கெங்கு வாழ்கின்றானோ அங்கெல்லாம் தன் சொந்த கலாச்சாரத்தை நிலை நிறுத்தியே வந்துள்ளான் என்பதனை நம் வரலாறுகள் ஊடாக கண்டுள்ளோம். அந்த வகையில் இன்று இலங்கை, இந்தியா, லண்டன், பிரான்ஸ், கனடா, சுவிஸ், ஜேர்மனி போன்ற தமிழர்கள் வாழும் இல்லங்களில் எல்லாம் வலம் வந்து கொண்டிருக்கிறது. ஈழ மக்களுக்காக, ஈழமக்களின் இதயத்தின் உரிமைக் குரலாக வியாபார நோக்கமற்ற, முற்போக்கு சிந்தனையுள்ள ஈழவர் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது. ''ஈழதேசம்'' என்பதில் பெருமை கொள்கின்றேன்.

'அகதிகள் பக்கம்' என்று எமது மக்களின் அன்றாட துயரங்களை வெளிக்காட்டுவதற்காகவே ஒரு பக்கத்தை ஒதுக்கி அதன் மூலம் இன்றைய ஈழத்தின் அவலங்களை வெளி உலகிற்கு அறியச் செய்வதில் ஈழதேசம் முன்னணியில் இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இன்று உலகெங்கும் பல நாடுகளில் அகதிகள் வாழ்கின்றார்கள். உருவாகிக் கொண்டும் இருக்கின்றார்கள். ஆனால் நம் நாட்டு அகதிகள் படும் துயரங்கள், இழப்புகள் போல் எங்கும் இல்லை. அவ்வளவு இழப்புக்களையும் துயரங்களையும் புள்ளி விபரங்களுடன் மிகவும் தெளிவுடன் காட்டுகிறது அகதிகள் பக்கம்.

கொழும்பு அரசியல் சுயநல தமிழ் வியாபாரிகளின் நிலைமைகளை கூத்தர் உண்மையிலேயே சித்தரிக்கின்றார். உண்மையில் கூத்தர் சிரித்தாலும் எமது இனத்தின் நிலையை எண்ணும்போது மனம் கலங்கிக் கொண்டே இருக்கிறது. இவை தவிர ஈழப் பிரச்னையைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கும் சச்சிதானந்தன் போன்ற சுயநலவாதிகளின் உண்மைத் தோற்றத்தை உலகிற்கு வெளிக்காட்டும் வகையில் அமையும் கட்டுரைகள், படிப்பினைகளை ஊட்டும் கதைகள், தமிழ் இனத்தின் அவலங்கள், நடைமுறைப் பிரச்னைகளை மையமாக வைத்துப் புனையப்படும் கவிதைகள் போன்ற பகுதிகளும், வாசகர் கண்ணோட்டம், வாசகர்களின் சந்தேகங்களுக்கு எள்ளளவும் பக்கம் சாராமல் பதில் கூறும் ''கேளுங்கள் பகுதி'' இன்னும் எவ்வளவோ நடைமுறைத் தமிழ், இன்னும் எவ்வளவோ நடைமுறை. தமிழ் நாட்டு நடப்புக்களை தன்னகத்தே கொண்டு வெளிவரும் ஈழ தேசம் உண்மையிலேயே எம் இனத்தின் மத்தியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் நம்பிக்கை நட்சத்திரம் என்பதில் ஐயம் இல்லை.



எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் ஆணித்தரமான உண்மைகளை ஐயம் இன்றி வெளிப்படுத்தும் ''எமது குரல்'' எனும் ஆசியர் உரையில் காலத்தின் கட்டாயத்திற்கிணங்க நிகழ்கால தமிழ் இனத்தின் துயரங்களை மிகவும் பயனுள்ளதாக எழுதி வருகின்றார். ஒற்றுமையே பலம் என்பது போல் ஒலிக்கின்றது எமது குரல். ஒற்றுமை ஊடாக சுதந்திர ஈழத்தை அடைய ஈழதேசம் முன்வரும் என்பதில் எமக்கும் நம்பிக்கை உண்டு.

எவ்வளவோ கஸ்ரங்களின் மத்தியிலும் அன்னிய தேசத்தில் இருந்து கொண்டு பொருளாதார, பாதுகாப்புப் பிரச்சனைகள் மத்தியிலும் ஓரளவு தமிழ் மக்களின் இதயக் குரலாக வெளிவந்து கொண்டிருக்கும் 'ஈழ தேசம்' உண்மையில் தமிழ் இனத்தின் விடியலின் ஒரு விடிவெள்ளி மட்டுமல்ல, நாளைய எமது வரலாற்றின் ஒரு மைல் கல்லும் தான்.

சோதனைகள் பல வென்று
சாதனைகள் பல படைத்து
ஈழ தேசம் வரை சென்று
வெற்றிக்கொடி நாட்டிட
என் வாழ்த்துக்கள்

பிரபஞ்சப் பிரியன்
— திருமலை —

அன்புடன் ஆசிரியருக்கு!

தங்களது ஜனவரி-96 ஈழ தேசம் இதழில் ''ஈழத் தமிழர்களின் ஈனத்தமிழன் சச்சிதானந்தன்'' என்ற தலைப்பில் வந்த கட்டுரையைப் படித்தேன். அப்போது நீங்கள் தினமணியில் வந்த செய்தியையும் பிரசுரித்திருந்தீர்கள். தினமணியில் அவரது கட்டுரை வந்தபோது நான் அதனை ஊன்றிப் படிக்கவில்லை. சச்சிதானந்தன் நல்லவர் தமிழர்களுக்காகப் பாடுபடுபவர் என்று நினைத்திருந்ததால் ஏதாவது நல்லதைத்தான் எழுதியிருப்பார் என்று நினைத்து அவரது கட்டுரையின் விபரீதத்தை அன்று கண்டு கொள்ளவில்லை. தங்களின் விரிவான கட்டுரையைப் படிக்கும்போது தான் சச்சிதானந்தன் போன்ற தமிழ் இனத் துரோகிகள் தமிழ் மக்கள் மத்தியில் தாங்கள் தான் தமிழ் மக்களின் காவலர்கள் என்று காட்டிக் கொண்டு அவர்கள் செய்யும் அடாவடித்தனங்களை விபரமாக எடுத்துக் காட்டியிருந்தீர்கள்.

இந்த நபர்கள் சம்பந்தமாக தமிழ் மக்கள் அறிந்திருக்கச் சந்தர்ப்பம் இல்லை. ஏனெனில் இவர்கள் மக்களை ஏமாற்றுவதில் வல்லவர்கள். இவர்கள் சம்பந்தமாக உங்கள் இதழைப் படிக்கும் போதுதான் தமிழ் மக்களுக்கு இவர்கள் எவ்வாறெல்லாம் துரோகம் செய்தார்கள், செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர முடிகின்றது. எப்படியாயினும் போலிச் சாமியார் ஒருவர் அடையாளம் காட்டப்பட்டதன் மூலம் ஈழத் தமிழர்கள் விழிப்படைய உதவியாக அமைந்தது. இன்னும் பல சாமியார்கள் இருக்கின்றனர்.

நன்றி
இ.பாலசிங்கம்
மண்டபம் முகாம்

மதிப்பான ஆசிரியருக்கு,

கதிர்காமர் சச்சிதானந்தத்தின் புத்தக வெளியீடு, அச்சுத் தொழில், புத்தக ஆசிரியர்களுடனுள்ள கொடுக்கல் வாங்கல் பற்றி மேலும் சில தகவல்களை அத்தாட்சிகளுடன் அனுப்பியுள்ளேன். தங்களினது பத்திரிகையில் அச்சிடவும்.

ஆ.இராசையா
கல்மண்டபம், ராயபுரம்.

'ஈழத் தமிழர்களின் ஈனத் தமிழன் சச்சிதானந்தன்' கட்டுரை குறித்து எண்பத்தாறு வாசகர் கடிதங்கள் வந்துள்ளன. இடமின்மையால் வெளியிடவில்லை. பின்னர் வெளியிடப்படும்.

## நிம்மதி பெருமூச்சு நித்தியமாய் எப்போது?



இரத்தத்தால் சிவந்த..
எனைத் தாலாட்டும் தாயகமே! தமிழீழமே!!
தண்ணீரில் தாமரை போல்...
தவிக்கும் உள்ளங்களே! தங்கங்களே!!
சூரிய தேவன் கூட
கதிர் இரத்தம் சிந்துகின்றானே!
இடி கூட இடிக்கிறது,...
இடியை விட செல்சத்தத்தை,
அரக்கன் உதிர்க்கின்றானே!
தேவனும் மழை கொண்டு...
தன் மக்களுக்காய்
கண்ணீர் வடிக்கின்றானே!
மழை வெள்ளம் வாட்டுகின்றது!
இது இயற்கையின் கொடுமை
ஆ....
செல் வெள்ளம் தாக்குகின்றது
இது செயற்கையின் கொடுமை
இரு பக்க கொடுமையாலும்
இறந்த தன் சேயை வைத்து...
ஈழத் தாயும் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றாளே!
இதை அறியாயோ! கால தேவா!!
சிறகடிக்கும்.
சிட்டுக்குருவிகளாய் திரிபவர்
கல்வி பறிபோகிறதே!
உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி
உருகும் எம் தமிழினம்
உயிர் துறக்கும் கோலம் கண்டு - என்
உள்ளம் பதைக்கிறதே!
சுடுகாடாய் தெரியும்
எம் தமிழீழம்
செழிப் போடு விளங்கும் திருநாள் எப்போ!
என் சிந்தை தறி கெட்டுப் —
பித்தனைப் போல் ஆகிறதே!
'ஓ'... கால தேவனே...
எம் இனத்தின் விடிவு நாளை
இழுத்து வந்து
என் கண் முன்னே நிறுத்து.
அன்றுதான்...
என் உடல், பொருள், ஆவி
அனைத்தும்
நித்தியமாக
நிம்மதிப் பெருமூச்செறியும்.

A.K. ரஜீதா
அகதி முகாம்
செந்தாரப்பட்டி.

பின்வாங்குதல்கள் தோல்விகள் அல்ல. அவை நாளைய வெற்றிகளுக்கான இன்றைய திட்டமிடல்களே.

படிப்பகம்

www.padippakam.com



# எமது குரல்

## தீர்வுத் திட்டமும் தமிழ் மக்களின் நிலைப்பாடும்

சந்தேகத்திற்குரியதான அரசியல் தீர்வு ஒன்றினை சந்திரிகா இந்த ஆண்டு ஜனவரி 16, செவ்வாய்க்கிழமை அன்று வெளியிட்டார். தமிழ் மக்களது எந்தவிதமான ஆலோசனையையும் பெற்றுக் கொள்ளாமல், தன்னிச்சையான சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதற்கான அந்தத் தீர்வு

1972ல் தனது தாயைப் பின்பற்றியதானது, ஆம்.

1972 மே 22ம் திகதி இலங்கைத் தீவை குடியரசாகவும், பௌத்த சிங்கள நாடாகவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்தார். அந்தவேளை தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கை எனக் கூறி ஆறு அம்சங்கள் கொண்ட அரசியல் திருத்தம் ஒன்றினை சிறிமாவிடம் சமர்ப்பித்தது. சிங்கள வெறிபிடித்த சிறிமாவோ அவற்றினைப் படித்துக் கூடப் பார்க்கவில்லை. தூக்கி வீசிவிட்டார் மூலையில். இலங்கை பௌத்த சிங்கள நாடானது. தமிழர்களது கல்வி உரிமையும் பறிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்துதான் தமிழீழத்திற்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அம்மாவுக்குப் பிள்ளை எந்தவிதத்திலும், குறைந்தவர் இல்லை என்பதை சந்திரிகா நிரூபித்துள்ளார். எந்தச் சிறுபான்மை இனத்தின் பிரச்சனைகள் இலங்கையில் முக்கியத்துவம் பெற்று நாடே சீரழிந்து போய்க் கொண்டிருக்கும் நிலையிலும் அந்தச் சிறுபான்மை இனத்தின் அபிப்பிராயங்களைக் கண்டு கொள்ளாமல் யாழ் நகரை வெற்றி கொண்ட வெறியில் தனது அரசியல் திட்டத்தை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்து விடுவதாகவும், உங்களுக்குத் தேவையென்றால் அவர்களிடம் பேசிக் கொள்ளலாம் என்றும் கையைக் காண்பித்து விட்டார் சந்திரிகா. இந்த அறிவிப்பு வெளி வந்ததும் கொழும்பில் சந்திரிகாவின் துணையில் இருக்கும் தமிழ்க் கட்சிகளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டதாகவும், எங்களுக்குக் கூடக் காட்டாமல் இப்படி சந்திரிகா செய்து விட்டார் என்று விரக்தியுடன் அறிவிப்புகள் வெளியிட்டுள்ளனர்.

ஏதோ மக்களாக ஒன்று கூடி இவர்கள் அனைவரையும் கொழும்புக்கு அனுப்பி தமிழருக்கு உரிமை பெற்றுத் தரும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க இவர்கள் அனைவரும் கொழும்பு சென்றது போலவும், இந்த மாதிரித் தியாகம் செய்யச் சென்றவர்களை சந்திரிகா ஏமாற்றி விட்டது போலவும் அறிக்கை விட்டு அனுதாபம் தேடுவதுமின்றி சந்திரிகாவையே தாங்கள் எதிர்ப்பது போன்று அறிக்கைகள் மூலம் காண்பிக்கின்றனர்.

ஈழத் தமிழரையும், அவர்களது கொள்கைகளையும் ஆட்சியாளரிடம் விற்றுப் பிழைப்பு நடத்தும் இவர்கள் தமிழ்த் தலைவர்கள் என்றும் பெயர் பெற்று விட்டனர். சிங்கள ஆட்சியாளரது வரலாறு தெரியாததால் இவர்கள் இப்படிச் சென்று ஏமாற்றப்பட்டனர் - என்றும் எண்ணத் தோன்றும்! உண்மைதான். இவர்கள் அனைவருமே 1983 ஆம் ஆண்டு கலவரத்துடன் கிளம்பி வந்தவர்கள்தான் - சிங்கள ஆட்சியாளர்கள் இவர்களைத் தமிழ்த் தலைவர்களாக்கி விட்டனர். பணத்திற்குப் பணம், பதவிக்குப் பதவி கிடைத்தது. வந்த வழியே தெரியாத இவர்களுக்கு எப்படி வரலாறு தெரிந்திருக்க முடியும். எப்படியோ சிங்கள ஆட்சியாளரது வெற்றிக்கு வழி கோலிவிட்டு, இப்போ தமிழர் நலனைப் பற்றிப் பேச முற்பட்டுள்ளனர். இதன் மூலம் மீண்டும் தமிழீழக் கோரிக்கைக்குள் மூக்கை நுழைக்கலாமா என்றும் சிலர் முயற்சிக்கின்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், போன்றவை முன்னர் தனி ஈழத்தில் பிரச்சனை தீராது என்றும், ஒன்றுபட்ட இலங்கையில்தான் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்றும் தனிநாடு கோரியோரை குறுகிய நோக்கம் கொண்டவர்கள் என்றும், முதலாளித்துவவாதிகள் என்றும் தங்களுக்குள்ளே பேசிக் கொள்வதன் மூலம் தங்களை யாழ்ப்பாணத்து மாக்சிஸ்டுகள் என்றும் பெருமையாக எண்ணியிருந்தனர். 83 ஆம் ஆண்டு கலவரத்துடன் ஏற்பட்ட விழிப்புணர்வுக்குள் மிகவும் சுலபமாக நுழைந்து கொண்டனர் இவர்கள். தாங்களும் தனிநாடுதான் கோருவதாக வடக்குக் கிழக்கு மக்களுக்கு கதை சொன்னவர்கள் இவர்கள். மாகாண அரசு தோல்வி கண்டதும் தங்கள் நிறத்தை மாற்றிக் கொண்டு கொழும்புக்குச் சென்று ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டேம் என்றும், தனி நாடே நாங்கள் கேட்கவில்லை என்றும், சிங்கள ஆட்சியாளருக்கு நண்பர்களாகக் காண்பித்தவர்கள் இவர்கள். ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், பின்னர் ஈ.பி.டி.பி ஆகியவை இந்த இரட்டை வேடத்தில் முக்கியமானவர்கள். தமிழ் மக்களை என்னென்ன சொல்லி ஏமாற்ற முடியுமோ அனைத்தையும் சொல்லி தமிழர் கட்சிகளே ஏமாற்றுகின்றன. புளொட் இயக்கத்தைப் பொறுத்தவரை அவர்களது பெயருக்கு ஏற்றவாறு சதியில் சிறந்து விளங்குகின்றனர். ஜெயவர்த்தன காலத்தில் JVP மற்றும் லலித் அத்துலத் முதலி ஆதரவு பிரேமதாசா, சந்திரிகா காலத்தில் சந்திரிகா என்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதற்கேற்றவாறு பிழைப்பு நடத்துவது அவர்களது சிறந்த தொழிலாகி விட்டது. அவற்றுக்கான காரணங்கள் கண்டுபிடித்து காலத்தை நல்ல முறையில் ஓட்டுகின்றனர். இப்படித் துரோகங்கள் பல வடிவங்களைப் பெற்றிருக்கும் வேளையில் புலிகளின் பங்கோ மிகவும் விசித்திரமானதாகவும் அழிவுக்கு சிறந்த வழியினைத் தேர்ந்தெடுத்து சிறப்புப் பணியாற்றுகின்றனவாகவும் உள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியது வீரச் செயல் என்றும், அரசியல் ரீதியாக வெற்றியென்றும் புலிகள் உட்பட வெளிநாட்டு ஆதரவாளர்கள் பலரும் விபரமான கதைகள் கட்டுரைகள் எழுதி மேற்கொண்டும் புலிகளது செயற்பாடுகளுக்கு ஊக்கமூட்டி கொம்பு சீவி வருகின்றனர். போதாக்குறைக்கு இலங்கைக்கு இந்தியா உதவி அளிக்கிறது. பைலட்கள் விழுந்துள்ளார்கள். காயம்பட்ட சிங்களச் சிப்பாய்கள் இந்திய மருத்துவமனைகளில், ஆயுதங்கள் வழங்குகிறார்கள் என்று ஈழத் தமிழர்களுக்கு இந்தியா மீது வெறுப்பு ஏற்பட வேண்டும் என்ற நற்சேவையைச் செய்வதில் ஐரோப்பா மற்றும் கனடாவிலிருந்து வெளிவரும் சில தமிழ்ப் பத்திரிகைகள் வரிந்துகட்டி பணி செய்கின்றன. வெள்ளைக்கார நாடுகளில் தொடர்ந்தும் தங்கியிருக்க எரிந்து கொண்டிருக்கும் ஈழத்துப் பிரச்சனைக்கு எண்ணை ஊற்றுவதே இவர்களது இன்றைய பணியாக உள்ளது. மரண அறிவித்தலில் லாபத்தைத் தேடும் பத்திரிகைகளும் நல்ல வளர்ச்சி பெற்றுள்ளன. இந்த மாதிரிப் பத்திரிகைப் பணியை உலகில் எங்கும் கண்டிருக்க முடியாது.

இவை அனைத்தும் சேர்ந்துதான் எங்கள் மக்களை இன்று புளியமரத்தின் கீழும், பூவரசமரத்தின் கீழும் கொண்டு சென்று விட்டுள்ளது. உடையின்றி, உணவின்றி, நோய்க்கு மருந்தின்றி, இருக்க இடமின்றி, கல்வியின்றி, காசு இன்றி, உறவினரின்றி அனைத்தையும் இழந்து அரளி விதையை அரைத்துக் குடித்து உயிரை விடும் அளவுக்கு எங்கள் மக்கள் திசை தெரியாது அவதியுறுகின்றனர். இவற்றுக்கு யார் காரணம்? மேற்சொன்னவர்களுக்கு இது தெரியவில்லையா, நன்கு தெரியும்.

கொழும்பில் எப்படி அரசியல் வியாபாரமோ அதே போன்றுதான் வெள்ளைக்கார நாடுகளில் இருப்பவர்கள் செய்வதும் பிரச்சனையைத் தீர்க்க, தனிநாடு காண என்ன வழி என்று முயற்சிகள் மேற்கொண்டார்களா? இல்லை புலிகளுக்கு கொம்பு சீவுவதுதான் பணி என்றாகிவிட்டது. அவர்களுக்கு வெறும் வறட்டுக் கௌரவங்களுக்காக நாம் எத்தினையாயிரம் தமிழ் மக்களைப் பலி கொடுத்துள்ளோம். இழந்த இந்த உயிர்களை மீளப் பெற முடியுமா? எந்த விடுதலைப் புலிகள் ஆதரவுப் பத்திரிகையாவது ஒன்றுபட்டுப் போராடுங்கள், பகையை மறவுங்கள், கூட்டு அமைப்பை உருவாக்குங்கள் என்று ஒருநாளாவது தங்கள் பத்திரிகைகளில் தலையங்கமாக எழுதியிருப்பார்களா? இல்லவே இல்லை! அப்படி எழுதவும் முடியாது எழுதவும் மாட்டார்கள். அப்படி ஓர் நல்ல காரியம் செய்தால் பத்திரிகை விற்பனையின் வீழ்ச்சி வந்துவிடும். விற்பனைக்குத் தடைகூட வந்துவிடும். விடுதலைப் புலிகளை ஊக்குவிப்பது மட்டும் இவர்கள் செய்யவில்லை. பிரேமதாசாவையும், பின்னர் சந்திரிகாவையும் பாராட்டி எழுதிய பத்திரிகைகளும் உண்டு. ஏனெனில் புலிகள் இவர்கள் இருவருடனும் நட்புக் கொண்டிருந்த வேளையில் அதனையும் ஊக்குவிக்க இந்தச் சிறப்புப் பணியினையும் செய்தனர்.

இன்றும் எல்லாம் இழந்த பின்னராவது தங்கள் பாணியை மாற்றியுள்ளனரா என்று பார்த்தால், முடியவே முடியாது என்று மறுக்கின்றனர். எங்கள் மக்கள் அனைவருமே திருந்தினால்தான் பத்திரிகைகள் உட்பட அனைத்திலுமே மாற்றம் ஏற்படும்.

நீண்ட காலப் போராட்டம் வெறும் வீரத்தினால் வீணானது என்பதை அனைவரும் உணர வேண்டும். வறட்டுக் கௌரவங்களை விட்டுக் கொடுக்காத உங்களுக்கு எதற்காக விடுதலை என்று மக்கள் கேட்க வேண்டும். தனி நபர் ஒருவரினால் ஆரம்பிக்கப்பட்டதல்ல எங்கள் விடுதலைப் போராட்டம், மக்கள் பட்ட துயரங்களின் விளைவுதான் விடுதலைப் போராட்டம் என்று உணர்த்த வேண்டும். மக்கள் கேள்வி கேட்க வேண்டும். பதில் சொல்லுமிடத்தில் இயக்கங்கள் இருக்க வேண்டும். மந்தைகளும், மேய்ப்போனுமாக இருந்ததை மாற்றினால்தான் விடிவு உண்டு, இல்லையேல் சந்திரிகா எழுதுவதுதான் தமிழ் மக்களின் விதியாகிவிடும். பக்குவம் இல்லாத தலைவர்களும், போராளிகளும் சேர்ந்து எம்மினத்தை நடு ஆற்றில் இறக்கிவிட்டு விட்டார்கள், கரை சேர நாம்தான் ஒன்றுபட்டு முயற்சிக்க வேண்டும்.

நல்லது நடக்குமா! அதற்கு இதனையே பிழைப்பாகக் கொண்டவர்கள் விடுவார்களா?

## வல்வெட்டித்துறை மக்கள் பிரபாகரனுக்கு அழைப்பு



கடந்த வாரம் விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் வல்வெட்டித் துறைக்குச் சென்று பொதுமக்கள் அனைவரையும் உடனடியாக இடம் பெயர்ந்த வன்னிப் பகுதிக்குச் செல்லும்படி உத்தரவு போட்டனர். உத்தரவு போட்ட புலிகளிடம் யார் இப்படிச் சொன்னது என்று மக்கள் கேட்டுள்ளனர்.

தலைவர் பிரபாகரன் தான் உத்தரவு போட்டுள்ளார் என்று கூறியுள்ளனர். அப்படியா என்று வினவிய மக்கள், நாங்கள் யாரும் வெளியேறத் தயாராக இல்லை. பிரபாகரனை இங்கே வரச்சொல்லுங்கள், நாங்கள் பேசிக் கொள்கிறோம் என்று சொல்லி விட்டனர்.

வேறு பகுதி மக்கள் இப்படிச் சொல்லியிருந்தால் தலை பறந்திருக்கும் என்று ஆக்ரோசமாக துப்பாக்கியைத் தூக்கி வேகமாகத் தோளில்ப் போட்டுக் கொண்டு சென்று விட்டனர் அந்தப் புலிகள்.

ஆசிரியர் : சி. தயாபரன்
வெளியிடுபவர் : அ. குமரப்பன்
முகவரி : 6/7, பூர்ணிமா குடியிருப்பு,
இரண்டாவது பிரதான சாலை,
யுனைட்டெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

ஜனநாயக வழி முறைகளுக்கு மதிப்பளித்து தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை பலப்படுத்துவோம்.

படிப்பகம்